# எம்.ஜி.ஆர் ஸ்பெஷல்

12-1-86



திரைச்சுவை

**பொங்கல் மலர்-1986**



WITH BEST COMPLIMENTS

# இந்த 'ஸ்பெஷல்'...

"திரைச்சுவை வாசகர்களுக்காக எம். ஜி. ஆர் பற்றி சிறப்பு மலர் வெளியிடப் போகிறோம். இந்த 'எம்.ஜி.ஆர். ஸ்பெஷல்' மலரை, நீங்கள் தொகுத்துத் தர இயலுமா? உங்களது அபிப்ராயங்கள் இல்லாமல், எம். ஜி. ஆரின் சாதனைகளை மட்டுமே உங்களால் சொல்ல முடியுமா?"

'திரைச்சுவை' ஆசிரியர், இனிய நண்பர், ஷ்யாம் கேட்டார்.

"முடியும்" என்றேன்.

எம். ஜி. ஆரின் சினிமா வாழ்வு பற்றி கிடைத்த சகல தகவல்களையும் ஒருமுனைப் படுத்தி திரட்டித் தந்திருக்கிறேன்.

சினிமாவுக்கு வருவதற்கு முந்தைய எம். ஜி. ஆர். கதை, சினிமாவில் எம். ஜி. ஆர். சாதனை, சினிமாவுக்கு எம். ஜி. ஆர். வகுத்துக் கொண்ட வழி, அவர் நடித்த படங்களிலிருந்து பிரபலமான பாடல்கள், ஒவ்வொரு திரைப் படத்தின் போட்டோ, எம். ஜி. ஆர். ரசிகர் ஒருவரின் பார்வையில் எம். ஜி. ஆர். நடித்த படங்கள் பற்றிய குறிப்புகள் எனப் பல்வேறு சிறப்பு அம்சங்களோடு இந்த 'ஸ்பெஷல்' தயாராகியிருக்கிறது.

இது—

எம். ஜி. ஆர். பற்றி தெரிந்திராத செய்திகள், வெளிவந்திராத படங்கள் இந்த 'ஸ்பெஷல்' மலரின் 'ஸ்பெஷல்' அம்சங்கள்.

இது வரை—

திரைச்சுவை வாசகர்களுக்கு மட்டுமல்லாது, எம். ஜி. ஆர். ரசிகர்களுக்கு மாத்திரமல்லாது, சினிமா ரசிகர்கள் அனைவருக்குமே 'பொங்கல் விருந்து'.



அறந்தை நாராயணன்



# சினிமாவுக்கு வருவதற்கு முன்னால்

எம். ஜி ஆர். பிரபலமடையத் தொடங்கிய 1949-ல் 'குண்டூசி' என்கிற சினிமா மாதப் பத்திரிகையில், அவரது வாழ்க்கை வரலாறு பற்றிய ஒரு கட்டுரை வெளிவந்தது.

எம்.ஜி.ஆர். வாழ்க்கை பற்றி அச்சில் வந்த முதல் கட்டுரை அது தான் என்று தெரிகிறது,

சினிமாவுக்கு வருவதற்குமுன்பு எம். ஜி. ஆர். என்ன செய்து கொண்டிருந்தார்? சினிமாவுக்கு அவரைக் கொண்டு வந்தது யார்?

இந்தக் கேள்விகளுக்கு—

1949 நவம்பர், 'குண்டூசி' இதழில் வெளிவந்த இந்தக் கட்டுரையில் விடைகள் கிடைக்கும்.

அந்தக் கட்டுரையின் சிலபகுதிகள் இதோ—

"சங்கீதம் இருக்கிறதே அது சினிமா உலகத்தில் மிக்க மதிப்புடன் விளங்குகிறது. சங்கீதம் இல்லாத படம் இந்தியாவில் ஓடவே ஓடாது.

இதனால் பாடத் தெரிந்த நடிக நடிகைகளுக்கே சினிமா உலகில் மிகுந்த கிராக்கி. அதே சமயம் சங்கீதம் சினிமா உலகத்திற்கு பெரும் தீமைகளையும் செய்திருக்கிறது என்பதையும் சொல்லியாக வேண்டும்.

சங்கீதம் முக்கியத்துவம் வகிக்கத் தொடங்கியதனால் சினிமாப் படங்களில் நடிப்பிற்கு உரிய ஸ்தானம் கிடைக்கவில்லை. பாட மட்டும் தெரிந்தவர்களை



அன்னையார் சத்தியபாமா

வைத்துக் கொண்டு பட முதலாளிகள் தைரியமாய்ப் படங்களைப் பிடித்திருக்கின்றனர்.

ஆனால் நல்ல நடிப்புத் திறமை, வசன சுத்தம், கவர்ச்சிகரமான தோற்றம் இவைகளைப் பெற்றிருந்தும் பாடத் தெரியாத குறையினால் அனேகர் உப நடிகர்களாகவே இருந்து மங்கி மறைந்திருக்கின்றனர்.

பின்னர் வந்தது இரவல் குரல் வாங்கும் வழக்கம். பாடத் தெரியாத பெண்களுக்கும் கதாநாயகி வேஷங்கள் கிடைக்கலாயின.

சமீப வருஷங்களில் தான் ஆண்களுக்குக்கூட குரல் இரவல் வாங்குவதற்கு படமுதலாளிகள் முற்பட்டனர்.

அது முதலே எம். ஜி. ராமச்சந்திரன் போன்ற சிலருக்கு கதாநாயகர்கள் வேஷம் கிடைக்கத் தொடங்கியது.

சமீப வருஷங்களில்தான் இவர் கதாநாயகன் ஆகியிருக்கிறார் என்றாலும், சினிமா உலகத்தில் சுமார் 15 வருஷ கால அனுபவம் உண்டு.

ராமச்சந்திரனுக்குப் பாடத் தெரியாது என்று சொல்வது தவறு. இப்போதுகூட, அவர் பிரமாதமாய் இல்லையென்றாலும் சுமாராகப் பாடக்கூடியவர் தான்.

ஒரு காலத்தில் அவர் பாய்ஸ் கம்பெனி நடிகராக இருந்தபோது பாட்டிலும் அவருக்கு நல்ல பெயர் இருந்ததாம். தொண்டை உடைந்து போன பிறகே அவர் சங்கீதம் பற்றி அசட்டை செய்து கொள்ள ஆரம்பித்து விட்டார். நடிப்பு விஷயத்திலேயே அவர் பூராக் கவனத்தையும் செலுத்த முற்பட்டார்.

ராமச்சந்திரன் நாடகத் துறையில் ஈடுபட்டது அவசியத்தின் பேரில்தான். அப்போது அவரது குடும்பத்தின் நிர்க்கதியான நிலைமையே அவரை நாடக உலகிற்கு கொண்டு வந்து சேர்த்தது.

கொல்லங்கோட்டை அடுத்த வடவனூரைச் சேர்ந்தவர் ராமச்சந்திரன்.

அவர் 1916-ம் வருஷம் ஜனவரி மாதம் 11-ம் தேதியன்று, மருதூர் கோபால மேனன்-சத்தியபாமா அம்மாள் ஆகியோரின் புத்திரராய்ப் பிறந்தார்.

ராமச்சந்திரனுடன் பிறந்தவர்கள் ஒரு தமக்கையும் தமையனும் ஆவர்.

தமக்கை காலமாகி விட்டார். தமையன் சக்ரபாணி மட்டும் இப்பொழுது சினிமா உலகில் பிரபல வில்லனாய் விளங்கி வருகிறார்.

'மருதூர்' என்பது எம். ஜி. சகோதரர்களின் வீட்டுப்பெயர் ஆகும். அந்தக் காலத்தில் இந்தப் பெயர் மலையாளப் பக்கங்களில் செல்வாக்குள்ள ஒரு பணக்காரக் குடும்பத்தைக் குறிப்பிட்டு வந்தது. சுமார் 35 பேர்களடங்கிய அக்குடும்பத்தில் ஒருவர்தான் கோபால மேனன்.

இருநாலக்குடா பக்கங்களில் அவர் ஹை ஸ்கூல் ஹெட்மாஸ்டராகவும், கவுரவ மாஜிஸ்திரேட்டாகவும் உத்யோகம் பார்த்து வந்தார்.

மேனனுக்குத் திருமணம் ஆன சமயத்தில் மேற்படி குடும்பத்தாரிடையே மனஸ்தாபம் ஏற்பட்டது. அதன் விளைவாக சொத்துகள் பங்கு பிரிக்கப்பட்டன. அது முதல் இந்தக் குடும்பம் க்ஷீன திசையை அடைய ஆரம்பித்து விட்டது.

மேனனின் இல்லற வாழ்க்கை பல கஷ்டங்களிடையே ஆரம்பமாகியது. ஆனால் நல்ல சம்பளத்தில் உத்யோகம் பார்த்து வந்ததால் அவர் கஷ்டங்களை ஒருவாறு சமாளித்துக் கொண்டார்.

ராமச்சந்திரன் பிறந்து இரண்டரை வருஷங்கள் ஆனபிறகு மேனன் காலமானார். பின்னர் அக்குடும்பம் ஆதரிப்பாரின்று தவிக்கலாயிற்று.

அவர்களது பரிதாப நிலைமையைக் கண்டு இரக்கம் கொண்டார் ஒரு தூர பந்து. அவர் போலீஸ் உத்தியோகத்திலிருந்தார். அவரது பராமரிப்பில் இக்குடும்பம் இருந்து வரலாயிற்று.

ராமச்சந்திரனும், சக்ரபாணியும் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டனர்.

ராமச்சந்திரன் மூன்ருவது வகுப்பிலும், சக்ரபாணி இரண்டாவது பாரத்திலும் பாஸ் ஆனுர்கள்.

அதற்குமேல் படிக்க விடாமல் அவர்களது குடும்ப சூழ்நிலையும், ஏதாவது தொழில் செய்து சம்பாதிக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டது.

வேலு நாயரின் நண்பர் நாராயண நாயர் அந்தச் சமயத்தில் மதுரை ஒரிஜனல் பாய்ஸ் கம்பெனியில் பின்பாட்டுப் பாடுபவராயிருந்தார்.

நாராயண நாயரின் சிபாரிசின் பேரில் ராமச்சந்திரன், சக்ரபாணி ஆகிய இருவரும் மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் நடிகர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

ராமச்சந்திரனுக்கு சிறு வயதிலேயே சங்கீதம் நாடகம் இவைகளில் பிரியம் ஏற்பட்டது. பள்ளிக்கூடத்தில் படித்து வந்தபோது, அவர் பள்ளிக்கூட நாடகங்களில் நடிப்பது உண்டாம்.

ராமச்சந்திரன் சாதாரண நிலையிலேயே கம்பெனியில் போய்ச் சேர்ந்ததால், அவர் கும்பலில் ஒருவராகவே இருந்து வந்தார்.

ஏதோ கும்பலோடு கோவிந்தா போடும் வேஷங்களே அவருக்கு அளிக்கப்பட்டன. அப்போது அவருக்கு வாரத்திற்கு நாலணுதான் சம்பளம் கிடைத்ததாம்....

ராமச்சந்திரனுக்கு முதன் முதலில் குறிப்பிடத்தக்க தனி வேஷத்தை வாங்கிக் கொடுத்தவர் ஹாஸ்ய நடிகர் காளி, என். ரத்தினம்தான் அவரது சிபாரிசின் பேரில் தான் ராமச்சந்திரனுக்கு வேஷம் கிடைத்தது...

ராமச்சந்திரன், தமையன் சக்ரபாணி, பி. யு. சின்னப்பா ஆகியோர் அந்தக் காலத்திலேயே அத்யந்த நண்பர்களாகி விட்டார்கள்.

சின்னப்பா ராஜபார்ட் ஆனதும் அவருக்கு அடுத்த முக்கிய வேஷங்களிலும், அவருடன் ஸ்திரி பார்ட்டாகவும் ராமச்சந்திரன் நடிக்கலானுர்...

ராமச்சந்திரனுக்கு ஒரிஜினல் பாய்ஸில் மிகுந்த நன் மதிப்பு ஏற்பட்டிருந்த காலத்தில் அவரது தொண்டை தகராறு பண்ணத் தொடங்கியது.

மேலும் அக்கம்பெனியில் இருந்தபடியே தமது கௌரவத்தை வரிசைக் கிரமமாய் இழக்க விரும்பவில்லை. ஆதலால் அவர் அக்கம்பெனியை விட்டு 1930-ம் வருஷம் விலகி, ரங்கூனுக்கு நாடகமாடச் சென்ருர்.

சில காலம் அங்கு நாடகமாடிவிட்டு ராமச்சந்திரன் திரும்பியதும், ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி முதலாளி தம் கம்பெனிக்கே மீண்டும் வந்துவிடும்படி அழைத்தார்.

ராமச்சந்திரன் அதற்கு இணங்கி அக்கம்பெனியில் சேர்ந்தார்.

தொண்டை உடைந்து போனதால் முன்போல் கதாநாயகன் வேஷங்களைச் சமாளித்துக் கொள்ள இயலாது என்பதை அவர் உணர்ந்தார்.

எனவே 'ஸ்டண்ட்'கள் சண்டைகள், அடங்கிய வேஷங்களில் கவனம் செலுத்தி, நல்ல அனுபவமும் புகழும் பெற்ருர்.

இந்தச் சமயத்தில் காலஞ்சென்ற எம். கந்தசாமி முதலியார் 'சதி லீலாவதி, படத் தயாரிப்புக்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார்.

ராமச்சந்திரனை ஒரு சினிமா நடிகராக்கிய பெருமை அவரையே சாரும். நடிகர் எம். கே. ராதாவின் தந்தையார் கந்தசாமி முதலியார் 'சதி லீலாவதி' படத்தில் ராமச்சந்திரனுக்கு இன்ஸ்பெக்டர் வேஷத்தை வாங்கிக் கொடுத்தார்.

அது முதல் ராமச்சந்திரன் நாடக உலகை மறந்து சினிமா உலகில் பூரண கவனம் செலுத்த ஆரம்பித்தார்.



குறுங்கும் எம்.ஜி. ஆர். (அமர்ந்திருப்பவர்)

**அ**து 1947.

தமிழ் சினிமாவுக்கு ஒரு புதிய கதா நாயகன் கிடைத்தார்.

அவர் பெயர்—

எம். ஜி. ஆர்.

அந்தப்படம்—

ஜுபிடரின் 'ராஜகுமாரி'.

அந்தப் படம் வெளிவருவதற்கு முன்பே பதினைந்து படங்களில் எம். ஜி. ஆர். நடித்திருக்கிறார். சின்னச் சின்ன கதாபாத்திரங்கள் ஆனாலும் கம்பீர மான பாத்திரங்கள்.

**1** எம். ஜி. ஆரின் முதல் படம்—

'சதிலீலாவதி' 1936-ல் வெளி வந்த இந்தப் படத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ரெங்கைய நாயுடுவாக அவர் நடித்தார்.

பாட்டுப் புத்தகத்தில் நடிகர் பட்டி யலில் அவரது பெயர் ஆருவது இடத் தில் இருக்கிறது. எம். கே. ராதா, டி. எஸ். பாலையா, எம். வி. மணி, பி. நம்மாள்வார், டி. என். லட்சுமண ராவ் ஆகியோர் பெயர்களுக்கு கீழே.

பாட்டுப் புத்தகத்தில் எம்.ஜி.ஆர் பெயர்—

எம். ஜி. ராமச்சந்திரன்.

**2** அதே வருடத்தில் இரண்டாவது படம்.

பெயர்—

'இரு சகோதரர்கள்'

பாட்டுப் புத்தகம் இருக்கிறது. அதில் எம். ஜி. ஆர். பெயரே இல்லை.

கே. பி. கேசவன், கே. கே. பெரு மாள், டி. எஸ். பாலையா, பிரதான நடிகர்கள்.

இப்படத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட சின்னச் சின்ன வேஷங்களில் நடித்த தாக பிற்காலத்தில் எம்.ஜி.ஆர். குறிப் பிட்டிருக்கிறார்.

# ராஜகுமாரிக்கு முன்னால்

3 'தட்சயக்ஞம்' —(1938)

இது எம். ஜி. ஆர். நடித்த மூன்றாவது படம்.

வி. ஏ. செல்லப்பா, எம். ஜி. நடராஜ பிள்ளை, சி. எஸ். செல்வரத்தினம் வி. நடராஜன் ஆகியோர் நடித்த இந்தப் புராணப் படத்தின் பாட்டுப் புத்தக நடிகர் பட்டியலில் ஐந்தாவதாக—

எம். ஜி. ராமச்சந்தர்.

நடித்தது மகாவிஷ்ணு வேஷத்தில்.

4 'வீரஜகதீஷ்'—(1938)

வி. எஸ். எம். ராஜாராம் அய்யர், கே. ரங்கநாயகி, எஸ். எஸ். ராஜாமணி நடித்த இந்தப் படத்திலும் எம். ஜி. ஆருக்கு துணைப்பாத்திரமே; ஆனால்; துப்பறியும் இன்ஸ்பெக்டர் வேஷம்.

5 'மாயா மச்சந்திரா' (1939)

நடிகர் பட்டியலில் மூன்றாவது இடம்.

பெயர்—எம். ஜி. ராமச்சந்தர்.

ஏற்று நடித்த வேஷத்தின் பெயர், சூர்யகேது. இதர பிரபல நடிகர்கள் : எம். கே. ராதா, எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி, ராதாபாய், என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம்.

6 'பிரகலாதா' (1939)

டி. ஆர். மகாலிங்கம், எம். ஆர். சந்தானலட்சுமி, என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம் நடித்த இந்தப் படத்தில் எம். ஜி. ஆர். நடித்தது இந்திரன் வேஷத்தில்.

பாட்டுப் புத்தகத்தில் அவரது பெயர்—



எம். ஜி. ராமச்சந்திரன், நான்காவது ஸ்தானம்.

7 'அசோக்குமார்' (1941)

எம். கே. தியாகராஜ பாகவதர், பி. கண்ணாம்பா, டி. வி. குமுதினி, வி. நாகையா நடித்த இப்படத்தை இன்றைய ரசிகர்களும் பார்த்திருக்க முடியும்.

எம். ஜி. ஆர். இப்படத்தில் தளபதியாக நடித்தார்.

அந்நாளின் வெற்றிப்படங்களில் ஒன்று. 25 வாரங்கள் ஓடியிருக்கிறது. இப்போதும் எங்காவது ஒரு ஊரில் திரைக்கு வந்து கொண்டேயிருக்கும் படம் இது.

8 'வேதவதி-அல்லது சீதாஜனனம்' (1941)

எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி, ஆர். பாலசுப்ரமணியம், பி. ஜி. வெங்கடேசன், அப்புறம்—

எம். ஜி. ராமச்சந்தர்.

இந்தப் புராணப்படத்தில் அவர் போட்டுக் கொண்ட வேஷம்-ராவணன் மகன் இந்திரஜித்.

9 'தாசிப்பெண் -அல்லது- ஜோதி மலர்' (1942)

பம்மல் சம்பந்த முதலியார் எழுதிய கதை.

எம். ஜி. ஆருக்கு ஒரு துணைக் கதாபாத்திரம். இந்தப் படத்தோடு இன்னொரு துண்டுப்படமும் சேர்க்கப் பட்டிருந்தது. அந்தப் படத்தின் பெயர்— 'கிழட்டு மாப்பிள்ளை'

10 'தமிழறியும் பெருமாள்' (1942)

வி. ஏ. செல்லப்பா, ஆர். பாலசுப்ரமணியம், எம். ஆர். சந்தானலட்சுமி ஆகியோர் நடித்த ஒரு பெண்பாற் புலவர் பற்றிய இந்தப் படத்தின் பாட்டுப்புத்தகத்தில் ஆறாவது பெயர்—

எம். ஜி. ராம்சந்தர்.

நடித்த கதாபாத்திரத்தின் பெயர் அந்தண குமாரன்.



**11 'அரிச்சந்திரா' (1943)**

பி.யு. சின்னப்பா—பி. கண்ணும்பா நடித்த இந்தப் படத்தில் எம். ஜி. ஆர். தளபதியாகத் தோன்றி நடித்தார்.

**12 'மீரா' (1945)**

இந்தப் படத்தின் பிரதான நடிகர்கள்—

எம். எஸ். சுப்புலட்சுமி, டி. எஸ். பாலையா, நாகையா, டி. எஸ். துரைராஜ்.

எம். ஜி. ஆருக்கு ஒரு சிறிய கதாபாத்திரம். இப்படத்தின் வசனத்தை 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி எழுதினர்.

**13 'சாலிவாஹனன்' (1945)**

ரஞ்சன், டி. எஸ். பாலையா, என். எஸ். கிருஷ்ணன், டி. ஆர். ராஜகுமாரி கே. எல். வி வசந்தா, ஆகியோர் நடித்த இந்தப் படத்தின் பாட்டுப் புத்தகத்தில் எம். ஜி. ஆருக்கு மூன்ருவது இடம்.

ஏற்று நடித்த கதாபாத்திரத்தின் பெயர்—விக்கிரமாதித்தன்.

**14 'ஸ்ரீ முருகன்' (1946)**

ஹொன்னப்ப பாகவதர், மாலதி, யு. ஆர். ஜீவரத்தினம், டி.வி குமுதினி பி. எஸ். வீரப்பா ஆகியோர் நடித்த இந்தப் புராணப் படத்தில் பரமசிவனுக எம்.ஜி ஆர் நடித்தார்.

அவரும் மாலதியும் ஆடிய சிவ-பார்வதி நடனம் பாராட்டுக்களைப் பெற்றிருக்கிறது. படத்தைத் தயாரித்தது ஜுபிடர் பிக்சர்ஸ்.

**15 'பைத்தியக்காரன்' (1947)**

என். எஸ். கிருஷ்ணனின் எனெஸ்கே பிலிம்ஸ் தயாரித்த சமகாலக் கதைப் படம் இது.

எஸ். வி. சகஸ்ரநாமம் கதாநாயகன்.

நடிகர் பட்டியலில் -எம். ஜி. ராமச்சந்திரன்!; மூன்ருவது இடம்.

இளம் பெண் காந்தா இளைஞன் மூர்த்தியின் காதலி. கிழவர் ஒருவருக்கு இரண்டாந்தாரமாக காந்தா கட்டிக் கொடுக்கப்படுகிருள். அபாண்டமாகக் குற்றம் சாட்டப்பட்டு மூர்த்தி ஜெயிலுக்குப் போகிருன்.

கிழவரிடமிருந்து காந்தாவும் சிறையிருந்து மூர்த்தியும் விடுதலையாகின்றனர்.

காந்தாவாக நடித்தது—

டி. ஏ. மதுரம்.

டி. ஏ. மதுரத்தின் காதலன் மூர்த்தியாக நடித்தது — எம். ஜி. ஆர்.

இப்படத்தின் மூலக்கதையை எழுதியவர்—ப. நீலகண்டன்.



# எம்.ஜி.ஆர் நடித்த படங்கள்

சதிலீலாவதி 1936
இரு சகோதரர்கள் 1936
தட்சயக்ஞம் 1938
வீரஜகதீஷ் 1938
மாய மச்சேந்திரா 1939
பிரகலாதன் 1939
அசோக்குமார் 1941
வேதவதி 1941
தாசிப்பெண் 1942
தமிழறியும் பெருமாள் 1942
அரிச்சந்திரா 1943
மீரா 1945
சாலிவாகனன் 1945
ஸ்ரீ முருகன் 1946
பைத்தியக்காரன் 1947
அபிமன்யூ 1948
மோகினி 1948
ராஜ்முக்தி 1948
ரத்னகுமார் 1949
ராஜகுமாரி 1947
மந்திரிகுமாரி 1950
மருதநாட்டு இளவரசி 1950
மர்மயோகி 1951

சர்வாதிகாரி 1951
அந்தமான்கைதி 1952
என்தங்கை 1952
குமாரி 1952
ஜெனோவா 1953
நாம் 1953
பணக்காரி 1953
கூண்டுக்கிளி 1954
மலைக்கள்ளன் 1954
குலேபகாவலி 1955
அலிபாபாவும் 40 திருடர்களும் 1956

மதுரைவீரன் 1956
தாய்க்குப்பின்தாரம் 1956
சக்கரவர்த்திதிருமகள் 1957
மகாதேவி 1957
புதுமைபித்தன் 1957
ராஜராஜன் 1957
நாடோடிமன்னன் 1958

தாய்மகளுக்குகட்டியதாலி 1959
பாக்தாத்திருடன் 1960
ராஜாதேசிங்கு 1960
மன்னாதிமன்னன் 1960

அரசிளங்குமரி 1961
நல்லவன்வாழ்வான் 1961
சபாஷ்மாப்பிளே 1961
தாய்சொல்லைத்தட்டாதே 1961
திருடாதே 1961
குடும்பத்தலைவன் 1962
மாடப்புரு 1962
பாசம் 1962
ராணிசம்யுக்தா 1952
தாயைக்காத்ததனயன் 1962
விக்ரமாதித்தன் 1962
ஆனந்தஜோதி 1963
தர்மம்தலைகாக்கும் 1963
கலைஅரசி 1963
காஞ்சித்தலைவன் 1963
கொடுத்துவைத்தவள் 1963
நீதிக்குப்பின்பாசம் 1963
பணத்தோட்டம் 1963
பரிசு 1963
பெரியஇடத்துப்பெண் 1963
தெய்வத்தாய் 1964
என் கடமை 1964
படகோட்டி 1964
பணக்கார குடும்பம் 1964
தாயின் மடியில் 1964
தொழிலாளி 1964
வேட்டைக்காரன் 1964
ஆசைமுகம் 1965
ஆயிரத்தில் ஒருவன் 1965
எங்கவீட்டுப் பிள்ளை 1965
கலங்கரை விளக்கம் 1965
கன்னித்தாய் 1965
பணம்படைத்தவன் 1965
தாழம்பூ 1965
அன்பே வா 1966
சந்திரோதயம் 1966
முகராசி 1966
நாடோடி 1966
நான் ஆணையிட்டால் 1966
பறக்கும் பாவை 1966
பெற்றால்தான் பிள்ளையா 1966
தாலி பாக்கியம் 1966
தனிப்பிறவி 1966
காவல்காரன் 1967
தாய்க்கு தலைமகன் 1967

விவசாயி 1967
ரகசிய போலீஸ் 115 1968
தேர்த்திருவிழா 1968
குடியிருந்த கோயில் 1968
கண்ணன் என் காதலன் 1968
புதியபூமி 1968
கணவன் 1968
ஒளி விளக்கு 1968
காதல் வாகனம் 1968
அடிமைப் பெண் 1969
நம் நாடு 1969
மாட்டுக்கார வேலன் 1970
என் அண்ணன் 1970
தலைவன் 1970
தேடிவந்த மாப்பிள்ளை 1970
எங்கள் தங்கம் 1970
குமரிக் கோட்டம் 1971
ரிக்ஷாகாரன் 1971
நீரும் நெருப்பும் 1971
ஒரு தாய் மக்கள் 1971
சங்கே முழங்கு 1972
நல்ல நேரம் 1972
ராமன் தேடிய சீதை 1972
நான் ஏன் பிறந்தேன் 1972
அன்னமிட்டகை 1972
இதய வீணை 1972
உலகம் சுற்றும் வாலிபன் 1973
பட்டிக்காட்டுப் பொன்னையா 1973
நேற்று இன்று நாளை 1974
உரிமைக்குரல் 1974
சிரித்து வாழவேண்டும் 1974
நாளை நமதே 1975
இதயக்கனி 1975
நினைத்ததை முடிப்பவன் 1975
பல்லாண்டு வாழ்க 1975
நீதிக்கு தலைவணங்கு 1976
உழைக்கும்கரங்கள் 1976
ஊருக்கு உழைப்பவன் 1976
இன்று போல் என்றும் வாழ்க 1976
நவரத்தினம் 1977
மீனவ நண்பன் 1977
மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் 1978

# எம்.ஜி.ஆர். படங்கள்

சதிலீலாவதி 1936



அரிச்சந்திரா 1943



நாம் 1953



அந்தமான் கைதி 1952





இரு சகோதரர்கள் 1936





கூண்டுக்கிளி 1954

ஸ்ரீ முருகன் 1946





'கூண்டுக்கிளி' படத்தில் எம். ஜி. ஆர், சிவாஜி, பி. எஸ். சரோஜா

ஒருநாள் வேட்டைக்குச் சென்ற ராஜகுமாரி மல்லிகா சுகுமார் என்கிற இளைஞனை அங்கே கண்டு காதலிக்கத் தொடங்குகிறாள். சுகுமாரின் தாயோ அந்தஸ்து பேதத்தை மகனுக்கு நினைவூட்டி காதலுக்குத் தடை போடுகிறார்.

மல்லிகாவை மயக்க மாயா சக்தி பெற நினைத்த ஆலகாலன் மந்திரவாதியை நாடுகிறான். அவனுக்கு உதவி செய்வதாகக் கூறிய மந்திரவாதி ராஜகுமாரி மல்லிகாவை கடத்திக்கொண்டு ஜாலத் தீவுக்கு சென்று விடுகிறான்.

ஆலகாலனால் மந்திரவாதியின் மாயசக்தியோடு மோதி மல்லிகாவை மீட்க முடியவில்லை.

''மல்லிகாவை மீட்டுக் கொண்டு வருபவருக்கே அவள் மண முடிக்கப் படுவாள்'' என்று அரசாங்கம் அறிவிக்கிறது.

இளைஞன் சுகுமார் இந்தச் சவாலை ஏற்று, சூழ்ச்சிகளை முடியடித்து, ராஜகுமாரி மல்லிகாவை மீட்டு அவளை மண முடிப்பது தான்'' ராஜகுமாரி திரைக்கதை.

# ராஜகுமாரி முதல்

**'ராஜகுமாரி'** (1947)

இது எம். ஜி. ஆரின் பதினாறுவது படம் கதாநாயகனாக நடித்த முதல் படம்

கற்பனைக்கு எட்டாத அழகி வேண்டுமென மாயா விளக்குடன் புறப்படுகிறான் ஓர் மந்திரவாதி.

இந்தியாவில் ஒரு நாடு. அதற்கு ஓர் அப்பாவி அரசன். அரசனை ஆட்டி வைக்கும் ஆலகாலன் ராஜகுமாரி மல்லிகா.

ஆலகாலன் மல்லிகாவை வசப் படுத்தப்பார்க்கிறான். மறுத்து வருகிறாள் மல்லிகா.

சுகுமாராக எம்.ஜி.ஆரும் (பாட்டுப் புத்தகத்தின் நடிகர் பட்டியலில் எம். ஜி. ராமச்சந்தர்) ஆலகாலனாக டி.எஸ். பாலையாகவும் ராஜகுமாரியாக கே. மாலதியும் நடித்தனர். கதை வசனம் டைரக்ஷன்-ஏ.எஸ்.ஏ. சாமி என்றும்; உதவி ஆசிரியர் மு. கருணாநிதி என்றும் பாட்டுப்புத்தகம் கூறுகிறது.

தொடர்ந்து—

17. 'அபிமன்யூ' (1948)
18. 'மோகினி' (1948)
19. 'ராஜமுக்தி' (1948)
20. 'ரத்னகுமார்' (1949)

இந்த நான்கு படங்களிலும் எம்.ஜி ஆர். கதாநாயகனாக நடிக்கவில்லை.

'அபிமன்'யூவில் எஸ்.எம். குமரேசன்.

'மோகினி'யில் கே.ஆர். ராமசாமி.

'ராஜமுக்தி'யில் எம்.கே. தியாகராஜபாகவதர்.

'ரத்னகுமார்' படத்தில் பி. யு சின்னப்பா.

'மந்திரகுமாரி' (1950) எம். ஜி. ஆரின் 21வது படம். கதை வசனம் கலைஞர் மு. கருணாநிதி.

மன்னர் சாந்தவர்மனுக்கு ஒரு மகள். பெயர் ஜீவரேகா. மந்திரியின் குமாரி அமுதவல்லி.

ஜீவரேகா வீர இளைஞன் வீரமோகனைக் காதலிக்கிறாள்.

அமுதவல்லி பார்த்திபனைக் காதலிக்கிறாள்.

பார்த்திபனோ பயங்கரவாதி. கொள்ளைக் கூட்டத்தலைவன்.




'மர்மயோகி' விளம்பரம்

# கூண்டுக்கிளி வரை

வீரமோகன் நீதிக்கும் நேர்மைக்கும் குரல் கொடுக்கிறவன்.

வீரமோகனாக எம். ஜி. ஆரும், ஜீவரேகாவாக ஜி. சகுந்தலாவும் பார்த்திபனாக எஸ். ஏ. நடராசனும் அமுதவல்லியாக மாதுரிதேவியும் நடித்தனர்.

உண்மையில் இப்படத்தில் ராஜகுருவாக நடித்த எம். என். நம்பியாருக்கும், பார்த்திபனாக நடித்த எஸ்.ஏ. நடராசனுக்கும் அமுதவல்லியாக நடித்த மாதுரிதேவிக்கும் தான் நடிப்பில் பலத்த வாய்ப்பும் புகழும் கிடைத்தது.

எம். ஜி. ஆரின் 22 வது படம்— 'மருத நாட்டு இளவரசி' (1950).

குறிஞ்சி நாட்டு இளவரசன் ரௌத்ரன் ஒரு காமத்தடாகம். கண்ணெதிரே காணும் பெண்கள் அவன் காமப்பசியைத் தீர்த்தாக வேண்டும். ஒரு நாள் அவனது பிடியில் அகப்பட்டுக் கொண்ட ஓர் இளம் பெண்ணை காண்டீபன் காப்பாற்றுகிறான்.

ரௌத்ரனைத் தாக்கிய காண்டீபன் ஊரை விட்டே ஓடுகிறான்.

மருத நாட்டை அடைந்த காண்டீபன் ஒரு கிராமியப் பெண்ணைச் சந்திக்கிறான். உண்மையில் அவள் மருத நாட்டு இளவரசி, பெயர்—ராணி.



அவள் இளவரசி என்பது காண்டீபனுக்குத் தெரியாது. அரண்மனை வேலைக்காரி என அவள் காண்டீபனிடம் கூறுகிறாள்.

சந்தர்ப்பங்களின் துணையால் காதல் அரும்பு கட்டுகிறது.

சூதின் சுரங்கமான துர்ஜயன், இளவரசன் ரௌத்ரனுக்குப் பெண் கேட்க குறிஞ்சி நாட்டிலிருந்து மருதநாட்டுக்கு வருகிறான்.

இளவரசி ராணி அவனை நன்றாக அவமானப்படுத்தி அனுப்புகிறாள்.

பழி வாங்கும் எண்ணத்தோடு திரும்பிய துர்ஜயன் படை வீரரோடு வந்து மருதநாட்டின் மீது மோதி, மன்னரைக் கைது செய்து இளவரசி ராணியைப் பாதுகாப்பில் வைக்கிறான்.

தன் காதலி அரண்மனை வேலைக்காரியைக் காப்பாற்ற வந்த காண்டீபன் அவள் இளவரசி என்பதைத் தெரிந்து கொள்கிறான்.

சூழ்ச்சிகளை வென்று, சாகஸங்கள் பல செய்து காண்டீபன் வெற்றி கொள்வது 'மருத நாட்டு இளவரசி' படத்தின் திரைக் கதை, கதை-வசனம் எழுதியவர் கலைஞர் மு. கருணாநிதி.

காண்டீபனாக எம். ஜி. ஆரும், இளவரசியாக வி. என். ஜானகியும் நடித்தனர்.

23-வது படம்—

'மர்மயோகி' (1951)

இதுவும் ஒரு ராஜா ராணிக் கதை.

கொல்லப்பட்ட மன்னர் மர்மயோகியாக வந்து பழிவாங்கும் கதை.

இதில் வீர தீர சாகஸங்கள் செய்யும் இளைஞன் கரிகாலனாக எம்.ஜி.ஆர். நடித்தார்.

24-வது படம்—

ஏ. வி. பி. ஆசைதம்பி எழுதிய

'சர்வாதிகாரி' (1951)

சர்வாதிகாரியாக எம். என். நம்பியாரும், மக்களாட்சித் தத்துவத்தில் நாட்டமுடைய வீர இளைஞன் பிரதாபனாக எம். ஜி. ஆரும் காதலி மீனாவாக அஞ்சலிதேவியும் நடித்தனர்.

இதே படம், இதே ஆண்டில், தெலுங்கு மொழியிலும்வெளிவந்தது.

26-வது படம்—

'அந்தமான் கைதி' (1952)

வடநாட்டில் நடந்த வகுப்புக் கலவரத்தில் சிதம்பரம் பிள்ளையின் குடும்பமே சீரழிகிறது. மனைவி கண்களை இழக்கிறாள். அவளும் மகள் லீலாவும் மகன் நடராஜனது சாகசத்தால் உயிர் பிழைத்து தமிழ் நாடு வந்து சேர்கின்றனர்.

**ஆறிலிருந்து அறுபது வரை**

எம். ஜி. ஆர். முதன் முதலில் நாடகத்தில் நடிக்க ஆரம்பித்தது ஆறுவது வயதில்.

அது— 'லவகுசா' நாடகம்.

எம். ஜி. ஆர். ஏற்று நடித்த கதாபாத்திரம் — குகன்.

**நாடகத்தில் முதன் முதலாக**

எம். ஜி. ஆர். முதன் முதலாக கதாநாயகனாக நடித்த நாடகம்—

'மனோகரா'.

ஏற்று நடித்த கதாபாத்திரத்தின் பெயர்—

மனோகரன்.

வந்து சேர்ந்த, சொத்துக் குரிய இவர்களை தெருவில் நிர்ச்சதியாக விரட்டியடிக்கிறார் மைத்துனரான திவான்பகதூர் பொன்னம்பலம் பிள்ளை.

பாலு என்கிற இளைஞன் ஆதரவளிக்கிறான். பாலுவிற்கும் லீலாவுக்கும் காதல் அரும்புகிறது.

திவான்பகதூர் பொன்னப்பலம் பிள்ளையால் கற்பழிக்கப்பட்ட வள்ளிக் கண்ணுவுக்கும் நடராஜனுக்கும் காதல்

ரயிலைக் கவிழ்க்க சதி செய்ததாக குற்றம் சாட்டி நடராஜனை சிறைக்கு அனுப்பி விட்டு, அவன் தங்கை லீலாவை பொன்னம்பலம்பிள்ளை மணக்கிறார்.

'அந்தமான் கைதி'யின் கதை இது.

நடராஜனாக எம். ஜி. ஆரும், வள்ளிக் கண்ணுவாக எம். எஸ். திரௌபதியும் நடித்தனர்.

27-வது படம்—

'என் தங்கை' (1952)

காஞ்சீபுரத்தில் வசிக்கும் ராஜேந்திரனுக்கு ஒரு தங்கை மீனா, ஒரு தம்பி செல்வரத்தினம், சென்னையில் படிக்கிறான்.





அண்ணன் ராஜேந்திரன் கஷ்டப் பட்டு பணம் அனுப்புகிறான் தம்பியின் படிப்புக்கு. தம்பி செல்வரத்தினம் தன்னோடு படிக்கும் மாணவி ராஜத்தை காதலிக்கிறான்.

ராஜேந்திரன் தன் தங்கை மீனாவுக்கு திருமணம் செய்ய முயற்சிக்கையில், தோழியின் வீட்டிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த மீனா இடி மின்னலால் கண்களை இழந்து குருடியாகிறாள்.

தாய் இறந்த போது சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுவதற்காக வஞ்சக சித்தப்பாவிடம் வீட்டை அடகு வைத்து தம்பியின் கல்யாணத்தை நடத்துகிறான் ராஜேந்திரன்.

தம்பியின் மனைவி ராஜம் பார்வையற்ற தங்கை மீனாவை பல விதத்திலும் கொடுமைப்படுத்துகிறாள்.

தம்பியும் தம்பி மனைவியும் தனிக் குடித்தனம் போகின்றனர்.

அச்சாபீஸில் வேலை செய்து வந்த ராஜேந்திரனின் வேலையும் பறி போகிறது வறுமையின் சீற்றம் நாளுக்கு நாள் அதிகரிக்கிறது.

சென்னையில் தம்பி செல்வம் குதிரைப் பந்தயத்துக்கு அடிமையாகி, கடைசியில் ஒரு விபத்தில் மனைவியையும், தனது கை கால்களையும் இழந்து, காஞ்சீபுரம் வந்து கண்ணன் காலடியில் உயிர் விடுகிறான்.
கருணாகரம்பிள்ளை ராஜேந்திரனை வீட்டை விட்டுத் துரத்துகிறார்.



பார்வையற்ற தங்கை மீனாவோடு சென்னைக்கு வருகிறான் ராஜேந்திரன்.

பெட்டியைத் தூக்கி கிடைத்த இரண்டணாவுக்கு தோசை வாங்கிக் கொண்டு வந்த ராஜேந்திரன் வழியில் பார்த்த ஒரு நொண்டிக்குத் தோசையைத் தருகிறான்.

அப்போது—

ஒரு திருடன் ராஜேந்திரன் கையில் மணிபர்சை வீசி விட்டு ஓடுகிறான்.

திருடனைத் துரத்தி வந்தவர்கள் ராஜேந்திரனையே திருடன் என தாக்குகிறார்கள்.

அண்ணன் அடிபடுவதைக் கேட்டு ஓடி வந்த மீனா வீழ்ந்து சாகிறாள்.

தங்கையின் உடலைத் தூக்கிக் கொண்டு ராஜேந்திரன் வங்கக் கடலில் இறங்கி மடிந்து போகிறான்.

'என் தங்கை' படத்தின் கதை இது. கதை எழுதியவர் — வில்லன் டி. எஸ். நடராஜன்.

ராஜேந்திரனாக எம். ஜி. ஆரும் (பாட்டுப் புத்தகத்தில் 'எம். ஜி. ராமச்சந்திரன்'), தங்கை மீனாவாக ஈ. வி. சரோஜாவும் நடித்தனர்.

28-வது படம்—

'குமாரி' (1952)

ராஜா ராணிக்கதை; கதாநாயகன் எம். ஜி. ஆர்; கதாநாயகி மாதுரிதேவி.

29-வது படம்—

'ஜெனோவா' (1953)

பைபிளிலிருந்து எடுக்கப்பட்ட ராஜா ராணிக்கதை. கதாநாயகன் எம். ஜி. ஆர், கதாநாயகி பி. எஸ். சரோஜா.

30-வது படம்—

'நாம்' (1953)

இப்படத்தை தயாரித்தது மேகலா பிக்சர்ஸ்.

கலைஞர் கருணாநிதி, எம்.ஜி.ஆர்., பி. எஸ். வீரப்பா, டைரக்டர் ஏ. காசிலிங்கம் ஆகியோர் மேகலா பிக்சர்ஸின் பாகஸ்தர்கள்.

கதை வசனம்—கலைஞர்கருணாநிதி கதாநாயகன் – எம்.ஜி.ஆர். கதாநாயகி வி.என்.ஜானகி. குத்துச்சண்டை வீரராக எம்.ஜி.ஆர். நடித்தார்.

31வது படம்—

'பணக்காரி' (1953)

ஒரு நண்பன் என்ற முறையில் பள்ளித் தோழன் சுந்தரோடு பழகி வந்தாள் பிரேமா. இந்த நட்பை சந்தேகிக்கிறார் கணவர் பாலு.

தான் தூய்மையாய்ப் பழகுவதைப் போல சுந்தரும் களங்கமின்றி பழகுவான் என நினைத்த பிரேமா ஏமாந்தாள்

**பட்டங்கள்!**

**பட்டங்கள்!!**

**பட்டங்கள்!!!**

கலை வாழ்வில் எம். ஜி. ஆர். பெற்ற பட்டங்களின் பட்டியல் இது●

'புரட்சி நடிகர்'
'கலைச்சுடர்'
'நடிகமன்னன்'
'கலைமன்னன்'
'மக்கள் நடிகன்'
'மக்கள் கலைஞன்'
'மக்கள் திலகம்'
'நிருத்திய சக்கரவர்த்தி'
'பொன்மனச் செம்மல்'

ஒரு சமயம் சுந்தர் வரம்பு மீறிப் போன போது பிரேமா கண்டித்தாள்.

குதிரையிலிருந்து வீழ்ந்து ஆபத்தான நிலையில் சுந்தர் இருப்பதைக் கேள்விப்பட்டு அவனைச் சந்திக்க பிரேமா போனுள்.

தப்பர்த்தம் கொண்ட பாலு, மனைவி பிரேமாவை வீட்டை விட்டுத் துரத்துகிருர். அவளுடன் பிள்ளையையும் அனுப்ப மறுத்தார்.

பிரேமா ஒரு விபத்துக் குள்ளாகி, தன் சிநேகிதி உஷா வீட்டில் சிகிச்சை பெற்றுக் கொண்டு இருப்பதைக் கேள்விப்பட்டு அங்கு சென்ற சுந்தர் வைத்தியப் பொறுப்பை ஏற்றுக் கொள்கிருன்

பிரேமா குணமடைகிருள்.

சுந்தர் தனது உண்மைக் குணத்தைக் காட்டுகிருன்.

அப்போது தான் அவனைப் புரிந்து கொள்கிருள் பிரேமா. உடனே அங்கிருந்து புறப்பட்டு பிரேமா தனது அண்ணன் வீட்டுக்குப் போகிருள்.

''பிரேமாவின் வாழ்க்கையை மட்டுமா கொந்தளிக்க வைத்தான் இந்த சுந்தர்? பத்மா என்ற பெண்ணின் வாழ்விலும் எத்தனை அலை மோதல்கள்? இல்லாவிட்டால் பூபதிக்குப் போட்டியாக சுந்தர் வருவானு? இதைக் கண்டு மனமுடைந்து பூபதி சென்று விடுவானு? போட்டியாகத் தான் வந்தானே ஒரு நிலையில் இருக்கக் கூடாதா? புஷ்பத்துக்குப் புஷ்பம் தாவும் பட்டாம்பூச்சியைப் போல, சுந்தர், பிரேமாவைப் பார்த்ததும் அவளைப் பின் தொடர்ந்து செல்ல வேண்டுமா?''



இந்தக் கேள்விகளை 'பணக்காரி' பாட்டுப் புத்தகம், கதைச் சுருக்கத்தின் முடிவில் கேட்டு ''விடை வெள்ளித் திரையில்'' என்று கூறுகிறது.

பணக்காரி பிரேமாவாக டி. ஆர். ராஜகுமாரியும் கணவர் பாலுவாக வி. நாகையாவும், சுந்தராக எம். ஜி. ராமச்சந்திரனும், பத்மாவாக யோக மங்களமும், பூபதியாக ஜாவர் சீதா ராமனும் நடித்தனர்.

32-வது படம்—

**எம். ஜி. ஆர்.**
**குருநாதர்கள்!**

மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி என்கிற நாடகக் குழுவில் சேர்ந்த போது எம். ஜி. ஆருக்கு நடிப்புச் சொல்லிக் கொடுத்தவர்—காளி, என். ரத்தினம்.

பின்னுளில்—

கலைஞர் எம். கே. ராதாவின் தந்தையார் கந்தசாமி முதலியார் நடிப்புச் சொல்லிக் கொடுத்தார்.

வாள் வீச்சுப் பயிற்சியில் எம். ஜி. ஆரின் குருநாதர்—கந்தசாமியப்பா,





'கூண்டுக் கிளி' (1953)

ஜீவா!

ஒரு தனிப் பிரகருதி; பச்சையாகச் சொல்லப் போனால் ஒரு பைத்தியம்.

அவனுக்கு மங்களாதான் வாழ்க்கை ஜீவனாக வேண்டுமாம்.

ஆனால்—

மங்களாவோ தங்கராஜுவின் மனைவியாகி விட்டாள்.

இது — முதல் சிக்கல்.

மங்களாவின் கணவன் தங்கராஜுவோ ஜீவாவின் ஆருயிர் நண்பனாக இருந்து விட்டான்.

இது — இரண்டாவது சிக்கல்.

தங்கராஜுவைக் கைப்பிடித்த மங்களாவுக்கோ முதல் கடவுள்—கற்பு.

இது -மூன்றாவது சிக்கல்.

இந்தச் சிக்கல்களுக்கிடையே தங்கராஜுவின் கூண்டுக் கிளியாக மட்டுமல்லாமல் கொஞ்சும் கிளியாகவும் மங்களா இருந்தாள்.

நண்பன் ஜீவாவை தன் இல்லத்துக்கே தங்கராஜு அழைத்துவருவதும் மங்களாவைக் கெடுக்க ஜீவா முயல்வதும்— 'கூண்டுக் கிளி' படத்தின் திரைக்கதை.

எழுத்தாளர் விந்தன் கதை வசனம் எழுதிய இந்தப் படத்தில் தங்கராஜீவாக எம். ஜி. ஆரும், ஜீவாவாக சிவாஜி கணேசனும், மங்களாவாக பி. எஸ். சரோஜாவும் நடித்தனர்; டைரக்ஷன்—டி. ஆர். ராமண்ணா.

சிவாஜிகணேசனும், எம்.ஜி.ஆரும் இணைந்து நடித்த ஒரே படம் இது.

வெளிவந்த போது வெற்றி பெறவில்லை.

பின்னாட்களில் எம்.ஜி.ஆரும் சிவாஜியும் மிகப் பிரபலமான கலைஞர்களாக உருக்கொண்டு வளர்ந்து விட்டபின் தங்கள் தங்களுக்கு என்று தனித்தனியே பெருத்த ரசிகர் பட்டாளத்தை இவர்கள் பெற்றபின் இந்தப் படம் ஆங்காங்கே பின் கண்டவாறு விளம்பரப்படுத்தப்பட்டு, திரையிடப்பட்டது.

"எம். ஜி. ஆர். ரசிகர்களும் சிவாஜி ரசிகர்களும் தியேட்டரில் அமைதியாக இருக்கக் கேட்டுக் கொள்கிறோம்."

—என்று விளம்பரம் செய்தே இப்படத்தை ஓடச் செய்தார்கள் வினியோகஸ்தர்கள்.

'ராஜகுமாரி' முதல் 'கூண்டுக் கிளி' வரை...

எல்லா நடிகர்களையும் போல்,

எல்லாவித வேஷங்களையும்,

வில்லன் வேஷம் உட்பட,

எல்லா வேஷங்களையும் ஏற்றுத் திறம்பட நடித்த காலகட்டம் இது.

படக்குறிப்பு :

'கூண்டுக்கிளி' படத்தில் எம். ஜி. ஆர், சிவாஜிகணேசன், பி. எஸ். சரோஜா, மூவரும் போட்டி போட்டுக் கொண்டு உணர்ச்சி மயமாக நடித்தனர்.

'எம். ஜி. ஆர். ஸ்பெஷல்'
'திரைச்சுவை'யின் அடுத்து வரும் இதழ்களிலும் தொடர்கிறது...

# "அவர்... சகலகலா வல்லவர்"

'மர்மயோகி' 'தாய்க்குப் பின் தாரம்' 'நாடோடி மன்னன்' 'கலை அரசி' போன்ற படங்களுக்கு எம். ஜி. ஆரின் காஸ்ட்டியூமராக (தையற் கலைஞராக) இருந்தவர் பி. சி. ஃபிரான்சிஸ்

ஃபிரான்சிஸ் சொன்னார்;

''சினிமா பற்றிய சகல விஷயங்களும் எம். ஜி. ஆருக்குத் தெரியும் எடிட்டிங், டைரக்ஷன், ஸ்டண்ட், மியூஸிக். போன்ற பெரிய விஷயங்கள் மட்டுமல்லாமல், ஒப்பனை, உடை, போன்றவற்றிலும் ஞானம் உள்ளவர்.''

''படங்களுக்கு அவரது உடைகள் பற்றிய டிசைனை அவரே பென்சிலில் போட்டுக்காட்டுவார். என்ன துணி வாங்கினால் எடுப்பாக இருக்கும் என்று ஆலோசனை சொல்லுவார். அதே போல ஒப்பனையிலும் அவர் புதுப்புது ஆலோசனைகளை சொல்லுவார்''





ராஜகுமாரி 1947





சர்வாதிகாரி 1951



# எம்.ஜி.ஆர். படங்கள்



மந்திரிகுமாரி 1950

ஜெனோவா 1953





மர்மயோகி 1951

# எம். ஜி. ஆரும் சிவாஜியும்

'ரிக்ஷாக்காரன்' படத்தில் நடித்ததற்காக 'பாரத்' விருது பெற்ருர் எம் ஜி. ஆர்.

அப்போதைய, தென் இந்திய நடிகர் சங்கத்தலைவர் சிவாஜி கணேசன், இதற்காக ஒரு பாராட்டு விழா நடத்தினுர்.

நடிகர் சங்க வளாகத்தில், 1972, செப்டம்பர் 30-ம் நாள் விழா நடைபெற்றது.

விழாவிற்கு சிவாஜி கணேசன் தலைமை வகித்தார்.

பாராட்டுகளுக்கு நன்றி தெரிவித்து எம் ஜி. ஆர். ஆற்றிய உரையிலிருந்து

என் அன்புத்தம்பி சிவாஜி கணேசன் சிறந்த நடிகர், தலை சிறந்த நடிகர், அவர் நடிப்பின் சிறப்பு இந்தியா முழுதும் அல்லாது கடல் கடந்தும் பரவியுள்ளது.

இதுநாள் வரை எங்களை மோத விட்டு வேடிக்கை பார்க்க நினைத்தவர்களுக்கு இன்று சாவு மணி அடிக்கப்பட்டுள்ளது.

என் தாய் மேல் ஆணையாகச் சொல்கிறேன் — இன்று முதல் புதிய சகாப்தம் உருவாகி விட்டது'' என்று எம். ஜி. ஆர். பேசினுர்.

ஒரு சில பகுதிகள் :—

''என்னையும் சிவாஜி கணேசனையும் கலை உலகின் இரு கண்கள் என்று சகோதர சகோதரிகள் இங்கு கூறினுர்கள். சகோதரி சரோஜாதேவி நாங்கள் இருவரும் இப்படியே இணைந்து இருக்க வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தார்.

எங்களைப் பார்ப்பவர்கள் மனப்பாங்கிலும் கண்ணேட்டத்திலும் வேண்டுமானுல், நானும் சிவாஜி கணேசனும் கிழக்கு மேற்காக இருப்பது போ[illegible] தோன்றலாம். ஆனுல் நாங்கள் [illegible]வரும் என்றும் ஒன்ருகவே இருக்[illegible]ரேம்.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு பட்டங்களும் பதவிகளும் அந்தஸ்தும் எங்களுக்கு வருவதற்கு முன்பு நானும் தம்பி சிவாஜியும் தோள்மீது கை போட்டுக் கொண்டு, சென்னை யானைக் கவுனியில் இருந்து, ரயில் நிலையத்திற்கு நடந்து சென்றிருக்கிறேரும். அப்போது எல்லாம் யாரும் எங்களைப் பற்றி கவலைப்படவில்லை.

ஆனுல், நாங்கள் வளர்ந்து விட்ட பிறகு, எங்களைப் பற்றி, எங்களுக்கு இல்லாத அக்கறை, பல நண்பர்களுக்கு வந்திருக்கிறது. கலைஞர்களை வைத்து அவர்கள் வியாபாரம் நடத்தப் பார்க்கிருர்கள்''

நாங்கள் இருவரும் இணைந்தால் கலை உலகுக்கு நன்மைசெய்ய முடியும் என்று இங்கு பேசியவர்கள் குறிப்பிட்டார்கள்.



# மலைக்கள்ளன் TO பறக்கும்பாவை



**எம் ஜி.ஆரின் 33வது படம் 'மலைக்கள்ளன்' (1954)**

'மலைக்கள்ளன்' படத்துக்குப் பிறகு வெளி வந்த படங்கள் பற்றி பட்டியலைக் காட்டி, துரை மாணிக்கத்திடம் கேட்கபட்டது.

துரை மாணிக்கம் சென்னை, ஆயிரம்விளக்கில் வாழ்ந்து வருபவர். அப்பழுக்கில்லாத எம்.ஜி, ஆர். ரசிகர்.

1

துரை. மாணிக்கம் சொன்னார்...

''மலைக்கள்ளன் நல்ல படம்.நல்லா ஓடியது. பானுமதிதான் ஹீரோயின்.

'தமிழன் என்றொரு இனம் உண்டு' 'எத்தனை காலந்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே' இரண்டு பாடல்களை எம்.ஜி.ஆர். பாடினார்''

''டி. ஆர். ராஜகுமாரி, ஜி. வரலட்சுமியோடு எம்.ஜி.ஆர். நடித்த படம் குலேபகாவலி. சிங்கத்தோடு சண்டை போடுவார். 'மயக்கும் மாலை பொழுதே நீ வா வா' என்று ஷோக்கான பாடல் வரும்.''

''எனக்கு ரொம்பவும் பிடித்த படம் அலிபாபாவும் 40 திருடர்களும். 'மாசில்லா உண்மைக் காதலே' என்று ஒரு பாடல். பானுமதி ஹீரோயின் எம் ஜி ஆருக்கு பொருத்தமான ஹீரோயின்.

பி எஸ். வீரப்பா கொள்ளைக் கூட்டத் தலைவன், கலர் படம், தமிழில் வெளியான முதல் முழு நீள கலர் படத்தின்ஹீரோ எம் ஜி ஆர் தான்.''

''மதுரை வீரனில் எம் ஜி ஆர் ரொம்ப நல்லா நடித்தார். பானுமதி மனைவி, பத்மினியும் எம் ஜி ஆர் மேல் ஆசைப்படுவார். அந்த அளவுக்கு அழகாகவும், வீரமாகவும் எம் ஜி ஆர். இருப்பார். பானுமதியும், பத்மினியும் கவர்ச்சியாக இருப்பார்கள்.''

''எம் ஜி ஆர் என்றால் ஹீரோயின் பானுமதி தான் என்று அவ்வளவு பொருத்தம். இந்தப் பொருத்தம் தாய்க்குப் பின் தாரம் படத்திலும் தெரிந்தது.

பயங்கரமான காளை மாட்டோடு எம் ஜி ஆர் சண்டை போடுவார். 'ஆஹா நம் ஆசை நிறைவேறுமா'' நல்ல பாட்டு.''

''சக்கரவர்த்தி திருமகள் படத்தில் எம் ஜி ஆர் பெயர் — உதயசூரியன். அஞ்சலிதேவியும் எஸ். வரலட்சுமியும் எம் ஜி ஆரை காதலிப்பார்கள்.

பாட்டுப் போட்டியில் என். எஸ். கிருஷ்ணனை எம் ஜி ஆர் ஜெயிப்பார். 'பொறக்கும் போது பொறந்த குணம் போகப் போக மாறுது' என்ற ஒரு பாட்டு நல்லா இருக்கும்''



''சாவித்திரியோடு நடித்த படம் 'மகாதேவி'. சொல்லப் போனால் எம் ஜி ஆருக்கு சாவித்திரி பொருத்தம் இல்லை. 'குறுக்கு வழியில் வாழ்வு தேடிடும் குருட்டு உலகமா' என்கிற நல்ல பாட்டை எம் ஜி ஆர் பாடுவார்.

'மணந்தால் மகாதேவி! இல்லையேல் மரணதேவி! ஹஹ்ஹா!' என்று வில்லன் வீரப்பா சொல்லுவார்''

''டி. ஆர், ராஜகுமாரி, பி. எஸ். சரோஜாவுடன் எம் ஜி ஆர் நடித்த படம் புதுமைப்பித்தன். 'பாதை விட்டு பாதை மாறிப் போவதா' பாட்டை எம் ஜி ஆர் பாடுவார்''

'ராஜ ராஜன் — இந்தப் படத்தையும் நான் பார்த்தேன் எதுவும் ஞாபகம் இல்லே. படமும் சரியா ஓடலே''

''நாடோடி மன்னன் — படத்தை பல தடவை பார்த்திருக்கிறேன். எத்தனை தடவை என்று ஞாபகம் இல்லை. இன்னும் பார்ப்பேன்.

அவ்வளவு நல்ல படம் பாட்டு எல்லாமே டாப் பாதிவரைக்கும் பானுமதி அப்புறம் சரோஜாதேவி. சரோஜா தேவி சின்னப்பொண்ணு. அழகா இருக்கும். கொடியோடு எம் ஜி ஆர் பிக்சர்ஸ் என்று காட்டுவார்கள்.

இந்தப் படத்தில் ஏது எது நல்லா இருந்தது என்று பட்டியல் போடுவது கஷ்டம். எல்லாமே நல்லா இருந்தது. எம் ஜி ஆருக்கு இரண்டு வேஷங்கள்''

''தாய் மகளுக்கு கட்டிய தாலி ஒரு 'போர்' படம் ''

''வைஜெயந்திமாலாகூட எம் ஜி ஆர் நடித்த படம் - பாக்தாத் திருடன். அலிபாபா, குலேபகாவலி மாதிரி சாயுபு படமா? நல்லா இருக்கும் என்று நான் ரொம்பவும் எதிர்பார்த்தேன்''

''மன்னாதி மன்னன் — நல்லபடம். அஞ்சலி தேவியும், பத்மினியும் எம் ஜி ஆரை காதலிப்பார்கள். 'அவளா இவளா தேர்ந்து எடு! அழகிய பெண்ணை மாலையிடு' என்று ஒரு பாட்டு.''

''ராஜா தேசிங்கு — படத்திலும் எம் ஜி ஆருக்கு இரண்டு வேஷங்கள். பானுமதியும் பத்மினியும் நடித்தனர்''

''அரசிளங்குமரி — படத்தில் 'சின்னப் பயலே சின்னப் பயலே' என்று நல்ல பாட்டு. மக்களுக்கு எம் ஜி ஆர் அந்தப் படத்தில் அறிவுரைகள் சொல்வார்.''

''நல்லவன் வாழ்வான் — நல்ல படம் இல்லை. தாய் மகளுக்கு கட்டிய தாலிமாதிரியே இதுவும் நல்ல கதை இல்லை. இரண்டும் எம் ஜி ஆர் படம் மாதிரியேஇருக்காது.''

''சபாஷ் மாப்பிள்ளே — காமெடி படம். பணக்காரனாயிருந்தாலும் ஏழைகளோடு ஏழையாக வாழ வேண்டும் என்று எம் ஜி ஆர் நினைப்பார்.

மாலினி மாலினி என்று ஒருநடிகை எம் ஜி ஆர் ஜோடியாக நடித்தார் பொருத்தம் நல்லா இல்லை''

''தாய் சொல்லை தட்டாதே — தேவர் படம். எம் ஜி ஆர் ரசிகர்களுக்கு என்ன பிடிக்கும் என்பது தேவருக்குத் தெரியும். ஜோடியாக சரோஜா தேவியா? ஷோக்கா இருந்தது!

'காட்டுக்குள்ளே திருவிழா கன்னி பொண்ணு மணவிழா! சிரிக்கும் மலர்கள் தூவி சிங்காரிக்கும் பொன் விழா ஹோய் ஹோய்' என்று சரோஜாதேவி பாடுவார்.

'போயும் போயும் மனிதனுக்கு இந்த புத்தியைக் கொடுத்தானே' என்று ஜனங்களுக்கு எம் ஜி ஆர் புத்தி சொல்லிப் பாடுவார்''

''திருடாதே — படத்தில் எம் ஜி ஆர் நல்ல விஷயம் எல்லாம் சொல்லிப்

பாடுவார். சரோஜாதேவிதான் ஜோடி. 'கை படாத ரோஜா' என்று அப்போது சரோஜாதேவியை பத்திரிக்கையிலே எழுதுவார்கள்',

''குடும்பத்தலைவன்—தேவர் படம் எம் ஜி ஆர் ஜோடி சரோஜாதேவி. ஏதோ ஏதோ ஒரு மயக்கம் என்று ஒரு பாட்டு ஜில் என்று இருக்கும்.

'கட்டான கட்டழகுக் கண்ணு' என்று சரோஜாதேவி பாடுவார். அந்த அளவுக்கு கட்டுக்குலையாமல் எம் ஜி ஆர் கம்பீரமா இருப்பார்''

''மாடப்புரு—பார்த்தேன். எம் ஜி ஆர் படம் என்றால் பார்த்து விடுவேன் ஆனால் இந்தப் படம் பற்றி எதுவும் ஞாபகம் வரவில்லை''

''பாசம் — சரியில்லை. கடைசியில் எம் ஜி ஆர் செத்துப்போறதாகக் காட்டுவார்கள்.

அப்படியெல்லாம் காட்டக்கூடாது எங்களுக்குப் பிடிக்காது''

''ராணி சம்யுக்தா—பத்மினிதான் ஜோடி. சரோஜாதேவியை ஜோடியாக பார்த்த கண்களால் பத்மினியை பார்க்க முடியவில்லை, பத்மினியைக் காட்டிலும் சரோஜா தேவி தான் திறமையானவர். 'இதழிரண்டும் பாடட்டும் இமையிரண்டும் மூடட்டும் உதயசூரியன் மலரும் போது உனது கண்கள் மலரட்டும்' என்று ஒரு பாட்டு இந்தப் பாட்டு அப்போது பிடித்திருந்தது.''

''தாயைக் காத்த தனயன் — தேவர் படம், சரோஜா தேவி தான் காதலி.

'காட்டு ராணி கோட்டையிலே கதவுகளில்லை... காவல் காக்க கடவுளையன்றி ஒருவருமில்லை... காட்டிக் காட்டி மறைத்துக் கொள்ளும் சுயநலமில்லை' என்று சரோஜா தேவி பாடுவார். எம் ஜி ஆரும் 'கட்டித் தங்கம் வெட்டியெடுத்து காதல் என்னும்சாறு பிழிந்து என்று பாடுவார்.''

''விக்கிரமாதித்தன் — ராணி சம்புக்தா மாதிரியே வயசான பெரிய நடி



கைகள் எம் ஜி ஆரோடு நடித்தார்கள் பிடிக்கவில்லை''

''ஆனந்தஜோதி'— பரவாயில்லை ஆனால் அந்த தேவிகாவை எங்களுக்குப் பிடிக்கவில்லை.

'ஒரு தாய் மக்கள் நாமென்போம்' பாட்டில் நல்ல விஷயங்களை எம் ஜி ஆர் சொல்லுவார்.''

''தர்மம் தலைக்கும்—தேவர் படம் எம் ஜி ஆர் செய்து வரும் தர்மங்களையும் சொல்லிவிடும் தத்துவங்களையும் விளக்கும் தலைப்பு''

'தொட்டுவிடத் தொட்டுவிடத் தொடரும்' 'ஹலோ ஹலோ சுகமா' பாட்டுக்கள் காதல் போதை தரும்''

''கலைஅரசி—ரொம்பக் காலமாக வரப்போகுது, வரப்போகுது என்று காத்திருந்த படம்.

எம் ஜி ஆருடன் பானுமதி சரோஜாதேவியைப் பார்த்த கண்களுக்கு பானுமதி ரொம்ப வயசானவர் மாதிரி இருந்தார். 'வானமண்டலத்துக்குப் போகிற மாதிரி கதை''

''காஞ்சித் தலைவன் — மு. கருணாநிதி எம்.எல்.ஏ. கதை வசனம் எழுதித் தயாரித்த படம். எம் ஜி ஆர் எம்.எல் சி , எஸ்.எஸ்.ஆர். எம் எல்.ஏ நடித்தார்கள். ஜோடிதான் சரோஜா தேவி இல்லை பானுமதி.''

''கொடுத்து வைத்தவள் — 'என்னம்மா சவுக்கியமா எப்படியிருக்கு மனசு' என்று எம் ஜி ஆர் பாடுவார்.

'பெண்மையிலே தேனெடுத்து வந்தது தங்கத் தட்டு' என்று அந்தப் பாடலில் கிளுகிளுப்பான வரி வரும்''





'வெற்றிப் புன்னகை' (மன்னாதி மன்னன்)

''நீதிக்குப் பின் பாசம் — தேவர் படம். 'இடி இடிச்சு மழை பொழிஞ்சு எல்லாம் நின்னுச்சு! நெஞ்சில் இருந்த வாசல் திறந்து வச்சு இரண்டும் ஒன்னுச்சு' என்று சரோஜாதேவி பாடுவார்.''

''பணத்தோட்டம் — ஜவ்வாது மேடையிட்டு சர்க்கரையில் பந்தலிட்டு என்று எம் ஜி ஆர் பாடுவாரா? அதற்கு சரோஜாதேவி 'நாகலிங்கப் பூ எடுத்து நாலு பக்கமும் கோட்டை கட்டி வா வா' என்றும் 'ஆளான நாள் முதலாய் அச்சாரம் கொடுத்து விட்டு வாழாமல் வாழவிட்டு பாராமல் சென்ற கண்ணா' என்றும் பாடுவார்.

'என்ன தான் நடக்கும் நடக்கட்டுமே! தன்னாலே வெளி வரும் தயங்

காதே! ஒரு தலைவன் இருக்கிறான் மயங்காதே' என்று எம் ஜி ஆர் நல்ல பாட்டு பாடுவார்.''

''பரிசு — லட்சாதிபதியாகவும், நன்றாக குறி பார்த்து சுடும் போலீஸ் அதிகாரியாகவும் எம் ஜி ஆர் நடிப்பார். கொள்ளைக் கூட்டத்தை கண்டுபிடிப்பார். ஜோடி சாவித்திரி, அவ்வளவு திருப்தியில்லை.''

''பெரிய இடத்துப் பெண் — சரோஜா தேவி தான் ஜோடி. எங்கே தப்பு நடந்தாலும் தட்டிக் கேட்கற இளைஞராக எம் ஜி ஆர் நடிப்பார். 'பாரப்பா பழனியப்பா' என்ற பாட்டை பாடுவார். 'கட்டோடு குழலாட ஆட' பாட்டு இனிமையாக இருக்கும், நிறைய பாட்டுகள் நன்றாக இருக்கும்.''

''தெய்வத்தாய் — துப்பறியும் போலீஸ் அதிகாரியாக எம் ஜி ஆர் வருவார்.

'மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும்' என்று எம் ஜி ஆர் பாடுவார். இந்தப்பாட்டு அப்போது எல்லாம் எனக்குப் பிடிக்கும்.

'பருவம் போன பாதையிலே என் பார்வையை ஓட விட்டேன்' என்று சரோஜாதேவி பாடுவார்''

''என் கடமை — போலீஸ் இன்ஸ்பெக்டராக எம் ஜி ஆர் வருவார்.

'ஹலோ மிஸ் ஹலோ மிஸ் எங்கே போறீங்க ?' என்று சரோஜாதேவியைப் பார்த்துப் பாடுவார், 'நில்லடி நில்லடி சீமாட்டி' என்றும் பாடுவார்.

''படகோட்டி — சரோஜாதேவி தான் ஜோடி. 'தொட்டால் பூ மலரும்' என்று எம் ஜி ஆர் பாட, 'தொடாமல் நான் மலர்ந்தேன்' என்று சரோஜா தேவி பாடுவார்.

'கொடுத்ததெல்லாம் கொடுத்தான் யாருக்காகக் கொடுத்தான்?' பாடலில் தர்மம் செய்வதன் நன்மைகளை எம் ஜி ஆர். சொல்லுவார்.''

''பணக்காரக் குடும்பம் — 'பறக்கும் பந்து பறக்கும்' என்று ஒரு பாட்டு



வரும். 'ஒன்று எங்கள் ஜாதியே ஒன்று எங்கள் நீதியே' என்று எம் ஜி ஆர் பாடுவார்.

'இதுவரை நீங்கள் பார்த்த [illegible]வை இதுக்குத்தானா? இப்படியென்று சொல்லியிருந்தால் [illegible] வருவேனா' என்று எம் ஜி ஆரிடம் சரோஜாதேவி பாடுவார்''

''தாயின் மடியில் — 'அம்மா நீ எங்கே?' என்று அம்மாவைத் தேடும் பாச மகனாக எம் ஜி ஆர் வருவார்.

'ராஜாத்தி காத்திருந்தா! ரோஜா போல பூத்திருந்தா' என்று சரோஜா தேவி பாடுவார்.

இன்னொரு பாடலில் 'கொய்யாத பூவைக் கொய்து, கொத்தோடு கனிய செய்து கைகளிலே தேனெடுத்து பருக வில்லையே' என்று சரோஜாதேவி ஏங்குவார்.

''தொழிலாளி — தேவர் படம். எம் ஜி ஆரை கே. ஆர். விஜயாவும் காதலிப்பார், ரத்னா ரத்னா என்று ஒரு புது நடிகையும் காதலிப்பார்.

தொழிலாளியாக இருந்த எம்ஜிஆர் கண்டக்டராக முன்னேறுவார். 'ஆண்டவன் உலகத்தின் முதலாளி' என்று எம் ஜி ஆர் பாடுவார்.''

''வேட்டைக்காரன் — தேவர் படம்தான். சரோஜாதேவி இல்லை. ஆனாலும் சரோஜாதேவி மாதிரியே சாவித்திரி கவர்ச்சி காட்டி நடிச்ச படம் இது.

'மெதுவா மெதுவா தொடலாமா? என் மேனியிலே கை படலாமா?' என்று எம் ஜி ஆரிடம் சாவித்திரி பாடுவார்.

''ஆசை முகம் — 'எத்தனை பெரிய மனிதருக்கு எத்தனை சிறிய மனமிருக்கு' என்று எம் ஜி ஆர் பாடுவார். 'நீயா?



இல்லை நானு? நெஞ்சக் கதவை கொஞ்சம் திறந்தது நீயா? இல்லை நானு?'' என்று சரோஜாதேவி பாடுவார்''

''ஆயிரத்தில் ஒருவன் — எம் ஜி ஆரோடு ஜெயலலிதா ஜோடி சேர்ந்த முதல் படம். சரோஜாதேவி ஞாபகமே வரவில்லை. அவ்வளவு பொருத்தமா ஜெயலலிதா இருந்தார். 'நாணமோ இன்னும் நாணமோ?' என்று ஜெயலலிதாவோடு எம் ஜி ஆர் பாடுவார்.

ரொம்ப வருஷங்களுக்குப் பின் எம் ஜி ஆர் சுழன்று சுழன்று கத்திச் சண்டை போடுவார்''

''எங்க வீட்டுப் பிள்ளை — எம் ஜி ஆருக்கு டபுள் ஆக்ட். பிரமாதமா நடிப்பார். சரோஜாதேவிதான் ஜோடி.

'குமரிப் பெண்ணின் உள்ளத்திலே குடியிருக்கநான் வரவேண்டும்வாடகை என்ன தரவேண்டும்?' என்று ஒரு பாட்டு 'நான் ஆணையிட்டால் அது நடந்துவிட்டால் இங்கு ஏழைகள் வேதனைப் படமாட்டார்' என்று ஒரு அற்புதமான பாட்டை எம் ஜி ஆர் பாடுவார்''

''கலங்கரை விளக்கம்—இளம் வக்கீலாக எம் ஜி ஆர் வருவார். மகாபலிபுரம் போவார். அங்கே ஒரு பெண் பற்றிய மர்மத்தைக் கண்டறியப்பாடுபடுவார்.

'நான் காற்று வாங்கப்போனேன்? என்று ஒரு இனிமையான பாட்டு. சரோஜா தேவி தான் ஜோடி.''

''கன்னித்தாய்-தேவர் படம். ஜெயலலிதா ஜோடி. 'என்றும் பதினாறு வயதும் பதினாறு மனதும் பதினாறு' என்று ஜெயலலிதா பாடுவார். பொருத்தமாக இருக்கும். 'மானைப் பொறந்தா காட்டுக்கு ராணி, என்று எம் ஜி ஆர் பாடுவார்.''

## நடித்துக்கொண்டே இருப்பேன்

எம்.ஜி ஆர். முதலமைச்சர் ஆன பிறகும் சினிமாவில் நடிக்கவே விரும்பினார். அப்போதைய பிரதம மந்திரி மொரார்ஜிக்கு அனுமதி கேட்டு கடிதம் எழுதினார்.

அந்தச் சமயத்தில் (அதாவது 1978-ல்) சினிமாத் துறையின் சில நிகழ்ச்சிகளில் எம் ஜி. ஆர். கலந்து கொண்டு பேசிய பேச்சுக்களில் சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.

''சினிமாவை விட்டு என்னைப் பிரிக்க முடியாது. கலை வாழ்வை ஏழு வயது முதல் ஏற்றுக் கொண்டவன் நான். இந்தக் கலைத் துறையைவிட்டு என்னை யார் பிரிக்க நினைத்தாலும், என்னைப் பிரித்துவிட முடியாது.

நான் கலைத்துறையில் இருந்தாலும் நாட்டுக்குச் செய்ய வேண்டிய பணிகளையும் செய்வேன். பொதுப்பணியினையும் கலைப்பணியினையும் செய்து வருவேன்? நான் நடிக்கக் கூடாது என்பதில் ஒரு சிலருக்கு அக்கறை இருக்கிறது.

என்னைப் புரிந்து கொண்டு என்னை நம்பியவர்கள் பலர் கலையுலகில் துன்பச் சூழ் நிலையில் இருக்கிறார்கள் அவர்களுக்கு உதவ வேண்டிய நிலையில் நான் இருக்கிறேன்.

இந்த நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய கதைகளை அமைத்துக் கொடுத்தால், அக்கதை என்னுடைய கொள்கைகளைப் பிரதிபலிப்பதாக அமைந்தால், அம்மாதிரிப் படங்களில் நான் நடிப்பேன்.

என்னையும், நாட்டுச் சேவையையும் புரிந்து கொண்டு கலைத் தொண்டுக்காக என்னுடைய நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டால் நான் நடிப்பேன்.''



"பணம் படைத்தவன்—'பவளக் கொடியில் முத்துக்கள் பூத்தால் புன்னகை என்றே பேராகும்' என்று எம்ஜி ஆர் பாடுவார்."

"தாழம்பூ — 'துவானம் இது துவானம் சொட்டு சொட்டா உதிருது. அது தாழ்வாரத்திலும் கீழ்வாரத்திலும் தளதளவென வளருது' என்றுகவர்ச்சி யான பாட்டு இதில் வரும் எம் ஜி ஆர் காதலியோடு மழையில் நனைந்தபடி பாடுவார்"

"அன்பே வா — சிம்லாவில் 'புதிய வானம் புதிய பூமி எங்கும் பூமழை பொழிகிறது' எம் ஜி ஆர் பாடுவார்"

"சந்திரோதயம் — 'தினக் கவர்ச்சி' பத்திரிகையின் நிருபராக எம் ஜி ஆர் நடிப்பார். ஜெயலலிதா ஜோடி. பாரதியும் நடித்திருக்கிறார். 'புத்தன் ஏசு காந்தி பிறந்தது பூமியில் எதற்காக' என்று எம் ஜி ஆர் பாடுவார்."

"முகராசி — தேவர் படம். ஜெமினி கணேசனும் எம் ஜி ஆரும் சகோதரர்களாக நடிப்பார்கள். எம் ஜி ஆர் போலீஸ் இன்ஸ்பெக்டர் வேலை பார்த்து தாயின் மர்ம மரணத்துக்கு காரணமான துரோகியை கண்டுபிடிப்பார்.

'எனக்கும் உனக்கும் தான் பொருத்தம்! இதில் எத்தனை கண்களுக்கு வருத்தம்?' என்று ஜெயலலிதாவும் எம் ஜி ஆரும் பாடுவார்கள்."

"நாடோடி — ஜாதிச்சண்டை நடக்கும். ஜாதி பேதத்தை எதிர்த்து எம் ஜி ஆர் போராடுவார். சரோஜா தேவி—பாரதி இரண்டு பேரும் எம் ஜி ஆர் ஜோடிகள். படம் 'போர்' அடிக்கும்."

"நான் ஆணையிட்டால்— 'தாய் மேல் ஆணை தமிழ் மேல் ஆணை! குருடர்கள் கண்ணைத் திறந்து வைப்பேன்! தனியானாலும் தலை போனாலும் தீமைகள் நடப்பதை தடுத்து நிற்பேன்' என்று எம் ஜி ஆர் பாடுவார்."

"பறக்கும் பாவை— சர்க்கஸ் அழகியாக சரோஜாதேவி நடித்தபடம்.



சர்க்கஸ் காட்சிகளும் சாகஸங்களும், சண்டைகளும், சர்க்கஸ் அழகிகளின் கவர்ச்சியான தோற்றங்களும்கொண்ட இப்படத்தை நான் விரும்பிப் பார்த்தேன். எம் ஜி ஆர் சர்க்கஸ் வித்தைகளை அபாரமாகச் செய்வார்"

"பெற்றால் தான் பிள்ளையா—எம் ஜி ஆர் நன்றாகவே நடித்தார். படம் எனக்குப் பிடிக்கவில்லை!

கவர்ச்சியான காதல் காட்சிகள் இல்லை. சண்டைகள் இல்லை. எம் ஜி ஆர் சாதாரண மனிதர் மாதிரி கஷ்டங்கள் படுகிறார்."

**நடிப்பு விருந்து!**

"எம். ஜி. ஆர். காலத்தோடு வளர்ந்து வருகிற ஒரு டெக்னீஷியன் ஆவார். ராஜா சந்திரசேகர் காலத்திலிருந்து இந்தக் காலம் வரை அவர் நடித்துக் கொண்டிருக்கிறார் என்றால் மக்களின் ரசனைக்கேற்றபடி, அவர்கள் அவைக்கு ஏற்றபடி, தன் நடிப்பு விருந்தை மாற்றி மாற்றி வழங்கிக் கொண்டிருக்கிறார் என்று கருத வேண்டும்."

—ப. நீலகண்டன்,
1972 ஜனவரி.



# எம்.ஜி.ஆர்.படங்கள்

மலைக்கள்ளன் 1954



நாடோடிமன்னன் 1958



அலிபாபாவும் 40 திருடர்களும் 1956



ப 1956



சக்கரவர்த்திருமக



தாய்மகளுக்குகட்டியதாலி 1959







மன்னாதிமன்னன் 1960

தெய்வத்தாய் 1964







திருடாதே 1961





அரசிளங்குமரி 1961

பணத்தோட்டம் 1963





குடும்பத்தலைவன் 1962



பணம்படைத்தவன் 1965



கன்னித்தாய் 1965



படகோட்டி 1964

பரிசு 1963



கொடுத்துவைத்தவள் 1968





நீதிக்குப்பின்பாசம் 1963







நாடோடி 1966



கலைஅரசி 1963



விக்ரமாதித்தன் 1962





அன்பே வா 1966



பறக்கும் பாவை 1966



தொழிலாளி 1964



முகராசி 1966



ஆனந்தஜோதி 1963

சப்ாஷமாப்பிளே 1961



காஞ்சித்தலைவன் 1963





ஆயிரத்தில் ஒருவன் 1965



மாடப்புறா 1962



தாழம்பூ 1965



# தங்கத்தோணியிலே தவழும் பெண்ணழகே!

மலைக்கள்ளன், குலேபகாவலி, அலிபாபாவும் 40 திருடர்களும், மதுரைவீரன், ஆகிய படங்களின் மகத்தான வெற்றிக்குப் பிறகு—

தனக்குரிய கதை எது?

காட்சிகள் எவை?

பாடல்கள் எப்படியிருக்க வேண்டும்?

சண்டைக் காட்சிகள் எப்படி அமையவேண்டும்?

என்பனவற்றில் எம். ஜி. ஆர். மிகுந்த கவனம் செலுத்தலானர்.

முக்கியமாகக் காதல் காட்சிகளில்!

'மதுரை வீரன்' படத்தில் பொம்மி, வெள்ளையம்மாள் என இரண்டு மனைவிகள்.

ஒரு ஆண் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களால் காதலிக்கப் படுவதாக கதை அமைந்தால் ஆண்கள் மிகவும் ரசிப்பார்கள்; ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களால் காதலிக்கப்படும் ஆண்மகனைப் பெண்களும் வியப்பார்கள்.

'மதுரை வீரன்' உணர்த்திய கதை இது.

சரித்திரக் கதைகளிலும், ராஜா ராணிக் கற்பனைக் கதைகளிலும் பல தார மணம் அனுமதிக்கப்படும்.

சமூக வாழ்வில்?

சமூகப் படத்தில்?

அது அனுமதிக்கப்படாது.

ஆனல் ஒரு ஆண்மகனைப் பல பெண்கள் காதலிப்பதைத் தடை சொல்ல முடியாது.

கல்யாணம் ஒருத்தியோடு தான்.

எம். ஜி. ஆர். நடித்த சமூகப் படங்களில் கதாநாயகனை மூன்று அல்லது நான்கு பெண்கள் காதலிப்பார்கள்.

ஆனல்—

கதாநாயகன் ஒருத்தியைத்தான் கல்யாணம் செய்து கொள்வான். அந்த ஒருத்தியையும் அவனுகவே காதலிக்க மாட்டான். அவளே வலிய வந்து காதலிப்பாள்.

வலிய வந்து காதலிக்கப்படுவது ஆண்மைக்கு கம்பீரமானது.

அத்தகைய கம்பீரமான கதாபாத்திரங்களிலேயே எம். ஜி. ஆர். நடித்தார்.

அவரது படங்களின் கதாநாயகர்கள் படம் முடிவில் தான் திருமணம் புரிந்து கொள்வார்கள்.

காதலை வென்றடைய அந்தக் கதாநாயகர்கள் வீரசாகஸங்களை நிகழ்த்திய பிறகே, கதை முடிவில் கல்யாணம் செய்து கொள்வார்கள்.

ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களில் ஒருத்தியே கதாநாயகனோடு ம

வாழ்வை அடைவாள்.

மற்றவர்கள், அந்தக் கதாநாயகனை அடைய முடியாத விரகதாபத்தில் வீழ்வார்கள்.

இதோ...

இந்தப் படம் 'தலைவன்.'

கதாநாயகனை தடாகத்திற்குள் தள்ளி சரஸமாடி அவனை மயக்க ஒரு இளம் பெண் முயற்சிக்கிருள்.



'தலைவன்' படத்தில் ஜோதிலட்சுமியுடன்

கதாநாயகனுக்குத் திகைப்பு!

இந்தப் படம்—

'நேற்று இன்று நாளை'

கதாநாயகன் மீது வீழ்ந்து புரண்டு காதல் நாடகமாட முயற்சிக்கிருள் ஓர் இளம் பெண்.

கதாநாயகனுக்கு கட்டுக் கடங்காத திகைப்பு.



'நேற்று இன்று நாளை' படத்தில் மஞ்சுளாவுடன்

பி. பானுமதி, அஞ்சலிதேவி, பத்மினி, வைஜெயந்திமாலா, சாவித்திரி. ஆகியோருடன் நடித்த எம். ஜி. ஆர்.—

பின்னுளில், பாரதி, சரோஜாதேவி, ராஜஸ்ரீ, ஜெயலலிதா, சந்திரகலா, மஞ்சுளா, லதா ஆகிய இளம் கதாநாயகிகளோடு நடிக்கத் தொடங்கினர்.

அவரது படங்களின் இளமைக்கு புதுநடிகைகள் புதுமை சேர்த்தார்கள்.

காதல் காட்சிகளின் பாடல்களில் இளமை, இனிமை, புதுமை கொழிக்கும் வண்ணம் எழுதச் செய்தார் எம். ஜி. ஆர்.

அந்தப் பாடல்கள் காலங்களைக் கடந்து காதலை முழக்குகின்றன.

உதாரணத்திற்கு ஒரு சில பாடல்கள் :



'சந்திரோதயம்' படத்தில் ஜெயலலிதாவுடன



"பல்லாண்டு வாழ்க படத்தில் லதாவுடன்

## கொடுத்து வைத்தவள்

பாடல்: கண்ணதாசன்

பாடியவர்கள்: சௌந்திரராஜன்—சுசீலா

ஆண்: என்னம்மா சௌக்கியமா எப்படியிருக்குது மனசு

பெண்: ஏதோ உங்கள் ஞாபகத்தாலே
பொழச்சி கிடக்குது உசிரு (என்னம்மா

ஆண்: சின்னம்மா உடம்பில் இப்போ
சிரிக்குது காஞ்சிப்பட்டு—சிறு
தேன்குழல் போலே பூங்குழல் மேலே
தூங்குது மல்லிகை மொட்டு

பெண்: பெண்மையிலே தேனெடுத்து
வந்தது தங்கத்தட்டு—உன்
கண்களுக்கும் விருந்து வைக்க
பறந்தது காதல் சிட்டு (என்னம்மா

ஆண்: நாளொரு மேனி பொழுதொரு வண்ணம்
ஏறுது மெருகு அங்கே—அதை
மாலையில் பார்த்தா மனசில வெள்ளம்
ஊறுது உருகுது இங்கே

பெண்: அறுபது நாழிகை முழுதும் உன்னிடம்
அடைக்கலம் புகுந்தது நெஞ்சம்—நீ
ஆளவந்தாய் நான் வாழ வந்தேன்—இதில்
ஆனந்தம் இனியென்ன பஞ்சம் (என்னம்மா)

## தெய்வத்தாய்

பாடல்: வாலி

பாடியவர்: சௌந்திரராஜன்

ஒரு பெண்ணைப் பார்த்து நிலவைப் பார்த்தேன்
நிலவில் குளிரில்லை—அவள்
கண்ணைப் பார்த்து மலரைப் பார்த்தேன்
மலரில் ஒளியில்லை
அவளில்லாமல் நானில்லை
நானில்லாமல் அவளில்லை
கோடி மின்னல் போல் ஒரு பார்வை
மானோ மீனோ என்றிருந்தேன்
குயில் ஓசைபோல் ஒரு வார்த்தை
குழலோ யாழோ என்றிருந்தேன்
நெஞ்சோடு நெஞ்சை சேர்த்தாள்
தீயோடு பஞ்சை சேர்த்தாள்—இன்று
காதல் ஏக்கம் தந்தாள் சென்றாள்
நாளை என் செய்வளோ
கலை அன்னம் போல் அவள் தோற்றம்
இடையில் இடையோ கிடையாது—சிலை
வண்ணம் போல் அவள் தேகம்
இதழில் மதுவோ குறையாது

என்னோடு தன்னைச் சேர்த்தாள்
தன்னோடு என்னைச் சேர்த்தாள்—இன்று
காதல் ஏக்கம் தந்தாள் சென்றாள்
நாளை என் செய்வாளோ



## வேட்டைக்காரன்

பாடல்: கண்ணதாசன்
பாடியவர்கள்: சௌந்திரராஜன்—சுசீலா

பெ: மெதுவா மெதுவா தொடலாமா—என்
மேனியிலே கை படலாமா?
ஆ: வெட்கம் இப்போது வரலாமா? நீ
விலகிச் செல்வதும் சரிதானா? சரிதானா
விலகிச் செல்வதும் சரிதானா? சரிதானா
பெ: வேட்டைக்கு வந்தது நினைவில்லையா?
நினைவில்லையா
இங்கே வேறொரு புள்ளிமான் கிடைக்கலையா
கிடைக்கலையா
காட்டுக்குள்ளே இந்த நாடகமா
காதலென்றால் இந்த அவசரமா? அவசரமா?
(மெதுவா)
ஆ: குளிர்ந்த காற்றாய் மாறட்டுமா மாறட்டுமா-உன்
கூந்தலில் நடனம் ஆடட்டுமா ஆடட்டுமா
கொல்லும் கண்களை வெல்லட்டுமா
கோடிக் கதைகள் சொல்லட்டுமா (மெதுவா)
ஆ: இதயம் முழுதும் எனக்கில்லையா எனக்கில்லையா
இன்பமும்துன்பமும் உனக்கில்லையா உனக்கில்லையா
பெ: நாளை மணமக்கள் நாமில்லையா—அது
நடக்கும் வரை மனம் பொறுக்கலையா (மெதுவா)





'அடிமைப்பெண்' படத்தில் ஜெயலலிதாவுடன்

## குடியிருந்த கோயில்

பாடல் :
வாலி

பாடியவர்கள் :
சௌந்திரராஜன், சுசீலா



பெண் : ஆடலுடன் பாடலைக்கேட்டு
ரசிப்பதிலே தான் சுகம்? சுகம்? சுகம்?
ஆசை தரும் பார்வையிலெல்லாம்
ஆயிரம் எண்ணம் வரும்? வரும்? வரும்?

ஆண் : கன்னருகில் பெண்மை குடியேற
கையருகில் இளமை தடுமாற
தென்னை இளநீரின் பதமாக
இன்று நான் தரவா இதமாக

பெண் : செங்கனியில் தலைவன் பசியாற
நின்ற இடம் தேனின் சுவையூற
பங்கு பெற வரவா துணையாக-மன
ஊஞ்சலின் மீது பூமழை தூவிட உரியவன்
நீதானே

ஆண் : கள்ளிருக்கும் மலரே வளைந்தாடு
களைப்பாறமடியில் இடம்போடு
உள்ளிருக்கும் நினைவில் உறவாடு
உல்கையே மறந்து விளையாடு

பெண் : விம்மிவரும் அழகில் நடைபோடு
வந்திருக்கும் மனதை எடைபோடு
வேண்டியதைப் பெறலாம் துணிவோடு உன்
பாதையில் நான் ஊர்வலம் வருவேன்
பதுமையை நீ பாடு !

## காவல்காரன்

பாடல் :
வாலி

பாடியவர்கள் :
சௌந்திரராஜன், சுசீலா

நினைத்தேன் வந்தாய் நூறு வயது
கேட்டேன் தந்தாய் ஆசை மனது
நூறு நிலவை ஒரு நிலவாக்கியப்பாவை என்று
ஆயிரம் மலரை ஒரு மலராக்கியப் பார்வை இன்று
கண் மீனாக மானாக நின்றாடவா?
சொல் தேனாக பாலாகப் பண்பாடவோ
மாலை நேரம் வந்துறவாடவோ? (நினைத்தேன்

நிலைக் கண்ணாடிக் கன்னம் வந்து— ஆகா
மலர்க்கிள்ளும் கிண்ணம் என்று ஓகோ
அது - சிந்தாமல் கொள்ளாமல் பக்கம் வா
இன்பத்தேனோடை பாய்கின்ற சொர்க்கம் வா
மன்னன்... தோளோடு அள்ளிக் கொஞ்சுங் கிள்ளை
அவன் தேரோடு பின்னிச் செல்லும் முல்லை
உன்னை நெஞ்சென்ற மஞ்சத்தில் சந்தித்தேன்
உந்தன் கை கொண்டு உண்ணாத கன்னித்தேன்
(நினைத்தேன்



'நேற்று இன்று நாளை'
படத்தில் லதாவுடன்.

படத்தில் மஞ்சுளாவுடன்



இடை நூலாடிச் செல்ல செல்ல ஆகா
அந்த மேலாடை மூடிக் கொள்ள ஓகோ
சின்னப் பூமேனி காணாத கண்ணென்ன
சொல்லித் தீராத இன்பங்கள் என்ன

(நினைத்தேன்

## என் கடமை

பாடல் : கண்ணதாசன்

பாடியவர் : சௌந்திரராஜன்

ஹலோ மிஸ் ஹலோ மிஸ் எங்கே போறீங்க இன்று
ஏனிந்த கோபம் - கொஞ்சம் நில்லுங்க
தன்னந்தனியாகப் போகாதீங்க - உங்க
தள தள உடம்புக்கு ஆகாதுங்க
வழித்துணையாக வாரேனுங்க - இந்த
வாலிப மனசை மிஸ் பண்ணாதீங்க

கண்ணழகைக் கண்டால் கூட்டம் சேருங்க
காளையர்கள் நெஞ்சில் ஆசை தோணுங்க
மாப்பிள்ளை போல நான் வரும் போது
பார்ப்பவர் உள்ளம் மாறுதுங்க

ஆசையுடன் பார்த்தால் மோசமில்லீங்க
ஆதரவைக் கேட்டால் பாவமில்லிங்க
நாட்டுக்கு நாடு வீட்டுக்கு வீடு நடப்பது தானே
ஓடாதீங்க

பாடல்: கண்ணதாசன்

பாடியவர்: சௌந்திரராஜன்

நில்லடி நில்லடி சீமாட்டி உன் நினைவில் என்னடி சீமாட்டி
வில்லடி போடும் கண்களிரண்டில் விழுந்ததென்னடி
சீமாட்டி
கட்டான உடல் காயாயிருந்து கனிந்ததென்னடி சீமாட்டி
சிட்டாய்ப் பறக்கும் கால்களிரண்டில்
தயக்கமென்னடி சீமாட்டி—இங்கு
வந்தது என்னடி சீமாட்டி சங்கதி சொல்லடி சீமாட்டி
தந்தியை மீட்டும் கைகளாலே தழுவிக்கொள்ளடி சீமாட்டி
வண்டு பறக்கும் கூந்தலுக்குள் செண்டாகநான் வரட்டுமா
முந்தானையில் தொட்டில் கட்டி இருக்கஇடம் கிடைக்குமா
சங்கு கழுத்தில் பொங்கும் மங்கலதாலி ஒன்று தரட்டுமா
கண்ணடி பட்டது சீமாட்டி கலக்கம் வந்தது சீமாட்டி
உன்னையல்லாது இன்னொரு கன்னி
உலகிலேதடி சீமாட்டி உலகிலேதடி சீமாட்டி

## அடிமைப்பெண்

பாடல் : புலமைப்பித்தன்

பாடியவர்கள் : பி. சுசிலா, என். பி. பாலசுப்ரமணியம்

ஆயிரம் நிலவே வா ஓர் ஆயிரம் நிலவே வா
இதழோரம் சுவை தேட புதுப்பாடல் வழிபாட

(ஆயிரம்



'நேற்று இன்று நாளை'
படத்தில் ராஜஸ்ரீயுடன்

நல்லிரவு துணையிருக்க நாமிருவர் தனியிருக்க
நாணமென்ன பாவமென்ன நடை தளர்ந்து
போவதென்ன
இல்லை உறக்கம் ஒரே மனம்
என்னாசை பாராயோ
என்னுயிரிலே உன்னை எழுதபொன்மேனி
தாராயோ (ஆயிரம்

பெண் : மன்னவனின் தோளிரண்டை மங்கையெந்தன்
கைதழுவி
கார்குழலும் பாய்விரிக்கும் கண்சிவந்து
வாய்வெளுக்கும்
இன்பமயக்கம் எழில் முகம் முத்தாக
வேர்க்காதோ
அந்தநினைவில் வந்துவிழுந்தேன்
கொத்தானபூவாக (ஆயிரம்

ஆண் : அல்லி மலர்மேனியிலே ஆடையென நான் இருக்க
பெண் : கள்ள விழிப்பார்வையிலே காணுமின்பம்
கோடி பெறும்
ஆண் : சின்ன இடையில்மலர் இதழ் பட்டாலும்
நோகாதோ
பெண் : இன்பமிதுவோ
ஆண் : இன்னுமெதுவோ ?
பெண் : தந்தாலும் ஆகாதோ ? (ஆயிரம்
ஆண் : பொய்கையெனும் நீர்மகளும்
பூவாடை போர்த்திருந்தாள்
பெண் : தென்றலெனும் காதலனின்
கைவிலக்க வேர்த்து நின்றாள்
ஆண் : என்ன துடிப்போ அவள் நிலை உணர
மாட்டாயோ
பெண் : அந்த நிலையில்
ஆண் : தந்த சுகத்தை
பெண் : நான் உணரக்காட்டாயோ ? (ஆயிரம்

## உலகம் சுற்றும் வாலிபன்

பாடல்: வாலி
பாடியவர்கள்: ஜேசுதாஸ், சுசீலா

ஆண்: தங்கத் தோணியிலே தவழும் பெண்ணழகே—நீ
கனவு கன்னிகையோ இல்லையோ காதல்
தேவதையோ
பெண்: வண்ண பாவை கன்னித்தேனை கன்னம்என்னும்
கிண்ணம் தந்து உண்ணச் சொன்னாளோ
(தங்கத்)
ஆண்: மின்னல் கோலம் கண்ணில் போட யார்
சொன்னதோ
பெண்: கோலம் போடும் நீலக் கண்ணில் நின்றதோ
ஆண்: மென்மை கொஞ்சும் பெண்மை என்ன
பாடல் பெறுதோ?



'நினைத்ததை முடிப்பவன்' படத்தில் மஞ்சுளாவுடன்





'இதயக்கனி' படத்தில் இந்தி நடிகை ராதாசலூஜாவுடன்

பெண்: இன்னும் கொஞ்சம் சொல்ல
காதல் உண்டானதோ?
ஆண்: அல்லிப்பூவை கிள்ளி பாக்க நான் என்னவோ?
பெண்: கிள்ளும் போதே கன்னிப் போகும் பூ வல்லவா?
ஆண்: கொஞ்சும் ஆசை நெஞ்சம் நாணம் விடாதோ?
பெண்: அச்சம் வெட்கம் விட்டுபோனால் தானே வராதது

## கொடுத்து வைத்தவள்

பாடல்: கண்ணதாசன்
பாடியவர்கள்: சௌந்திரராஜன்—சுசீலா

ஆண்: என்னம்மா சௌக்கியமா எப்படியிருக்குது மனசு
பெண்: ஏதோ உங்கள் ஞாபகத்தாலே
பொழச்சி கிடக்குது உசிரு (என்னம்மா)
ஆண்: சின்னம்மா உடம்பில் இப்போ
சிரிக்குது காஞ்சிப்பட்டு—சிறு
தேன்குழல் போலே பூங்குழல் மேலே
தூங்குது மல்லிகை மொட்டு
பெண்: பெண்மையிலே தேனெடுத்து
வந்தது தங்கத்தட்டு—உன்
கண்களுக்கும் விருந்து வைக்க
பறந்தது காதல் சிட்டு (என்னம்மா)
ஆண்: நாளொரு மேனி பொழுதொரு வண்ணம்
ஏறுது மெருகு அங்கே—அதை
மாலையில் பார்த்தா மனசில வெள்ளம்
ஊறுது உருகுது இங்கே
பெண்: அறுபது நாழிகை முழுதும் உன்னிடம்
அடைக்கலம் புகுந்தது நெஞ்சம்—நீ
ஆளவந்தாய் நான் வாழ வந்தேன்—இதில்
ஆனந்தம் இனியென்ன பஞ்சம் (என்னம்மா)

## தெய்வத்தாய்

பாடல் : வாலி
பாடியவர் : சௌந்திரராஜன்

ஒரு பெண்ணைப் பார்த்து நிலவைப் பார்த்தேன்
நிலவில் குளிரில்லை—அவள்
கண்ணைப் பார்த்து மலரைப் பார்த்தேன்
மலரில் ஒளியில்லை
அவளில்லாமல் நானில்லை
நானில்லாமல் அவளில்லை
கோடி மின்னல் போல் ஒரு பார்வை
மானோ மீனோ என்றிருந்தேன்
குயில் ஓசைபோல் ஒரு வார்த்தை
குழலோ யாழோ என்றிருந்தேன்
நெஞ்சோடு நெஞ்சை சேர்த்தாள்
தீயோடு பஞ்சை சேர்த்தாள்—இன்று
காதல் ஏக்கம் தந்தாள் சென்றாள்
நானோ என் செய்வளோ

# பெற்றால் தான் பிள்ளையா

# படமும்

# ரசிகர்களுக்கு

# எம்.ஜி.ஆர்



'பெற்றால்தான் பிள்ளையா?' படத்தில் உணர்ச்சிக் கட்டம்

**கோ**விலில் ஓர் குழந்தை.

அனுதையாகக் கிடக்கிறது.

அது—

ஜீவா என்கிற இளம் பெண் சேகர் என்பவனிடம் ஏமாந்து பெற்ற ஆண் குழந்தை.

அனுதையாகக் கிடக்கும் குழந்தையை நாடோடி ஆனந்தன் பார்க்கிறுன்.

எடுக்கிறுன்.

கண்ணன் என்று பெயரிட்டு வளர்க்கிறுன்.



# கழதமும்

மந்திரதந்திரம் செய்யும் கபாலி, அவனது தங்கை மோகினி உதவியால் நாடோடி ஆனந்தனுக்கு கிணறுகளில் தூர் எடுக்கும் வேலே கிடைக்கிறது.

ஆனந்தனே மோகினி காதலிக்கிறுள்.

அவனே கல்யாணம் செய்து கொண்டால் குழந்தை கண்ணன் மீதுள்ள பாசம் குறைந்துவிடும் என்று கருதிய ஆனந்தன் ''கண்ணனுக்கு விபரம் தெரிய வரை கல்யாணமே இல்லே'' என்றும் கூறிவிடுகிறுன்.

பின்னுல்—

சேகரும் ஜீவாவும் ஒன்ருகி, அனுதையாக விட்டுவிட்ட குழந்தையைத் தேடுகிருர்கள்.

ஆனந்தனிடம் தங்கள் குழந்தை வளர்ந்து வருவதைத் தெரிந்து கொண்டு கோர்ட்டில் வழக்குப் போடுகிருர்கள்.

கோர்ட்டில்—

குழந்தை கண்ணனே அவர்களது பெற்ருேர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று தீர்ப்பு சொல்லப்படுகிறது.

ஐந்து வருடங்களாக வளர்த்து வந்த கண்ணனேப் பறி கொடுத்துவிட்டு ஆனந்தன் பைத்தியம் பிடித்தவன் போல அலேகிறுன்.

இவ்வாறு, பெற்ருல்தான் பிள்ளேயா? கதை அமைந்திருந்தது.

ஆனந்தனுக எம். ஜி. ஆர், மோகினியாக சரோஜாதேவி, ஜீவாவாக சவுகார் ஜானகி, சேகராக அசோகன், குழந்தை கண்ணனுக பேபி ஷகிலா நடித்தனர்.

இப்படம் 1966 டிசம்பரில் வெளி வந்தது.

1967-ம் ஆண்டு ஜனவரி மாதம் எம். ஜி. ஆர் எழுதிய கட்டுரை ஒன்று ஒரு சினிமாப் பத்திரிகையில் பிரசுரமானது.

அந்தக் கட்டுரையை, [illegible] தனது ரசிகர்களுக்கு [illegible] எழுதியிருந்தார்.



"உங்கள் ரசனையின் விமர்சனத்தில்
பல கருத்துக்கள் வெளிப்படுவது போல
என் விமர்சனத்திலும் சில கருத்துக்களை
உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்
இந்த எண்ணம் எனக்கு
உண்டானதற்குக் காரணம் கலையுலகின்
எதிர்கால வளர்ச்சியைப் பற்றி நான்
சிந்திப்பதேயாகும்
முதலாவதாக நான் சொல்ல விரும்புவது
'ரசனைக்கு ஒரு வரையறை' தேவை
என்பது"

என்று அக்கடிதக் கட்டுரையில் முன்னுரையாக எம். ஜி. ஆர். எழுதியிருந்தார்.

அக்கட்டுரையில் அவர் கூறியிருந்த சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றது.

"ஒரு நடிகன் பல்வேறு குண விஷேடங்கள் உள்ள பாத்திரங்களை ஏற்று நடித்தால்தான் நடிப்பில் பல புதுமைகள் பிறக்க முடியும்

இப்போது நான் அறிமுகமாகியுள்ள அளவுக்கு அறிமுகமாகாத நிலையில் முன்பு 'என் தங்கை' என்ற படத்தில் நடித்தேன். அந்தப் படம் வெற்றிவாயிலை எட்டிப் பிடித்த படமும் கூட. அதில் எனக்கு சண்டைக் காட்சிகள் இல்லை. ஆனால் அது வெற்றி கண்டது.

நாளடைவில் நான் நடிக்கும் படத்தில் சண்டைக் காடசிகள் இருக்க வேண்டும் என்ற நிலை எப்படியோ நிரந்தரமாக உண்டாக்கப்பட்டு விட்டது.

அதற்குப் படத் தயாரிப்பாளர்கள் சொல்லும் காரணம் "ரசிகர்கள் உங்களுடைய சண்டைக் காட்சிகளை முக்கியமாக எதிர்பார்க்கிறார்கள்" என்பது. அதுமட்டுமல்ல, விநியோகஸ்தர்கள்

அப்படிச் சொல்கிறார்கள்'' என்பதும் அவர்கள் கூறும் காரணம்.

நான் சண்டைக் காட்சியில் நடித்தா 'என் தங்கை' படம் வெற்றி கண்டது?

இல்லையே?

இது இடையில் ஏற்பட்ட ஒரு நிலை''.

—என்று கூறிய எம்.ஜி. ஆர் அந்தக் கட்டுரையில் மேலும் எழுதினர்...

''சண்டைக் காட்சிகளே கூடாது என்று கூறத்தேவையில்லை. ''படக் கதைக்குச் சம்பந்தமில்லாத தேவைப் படாத பகுதிகளில் அத்தகைய காட்சிகள் இல்லாமலிருப்பதை நாங்கள் வரவேற்கவே'' என்பதை உங்கள் ரசனை உணர்வுடன், உணர்த்தவும் வேண்டும்.

இருந்தே தீர வேண்டும் என்ற நிர்ப்பந்தம் கூடாது. இல்லாமலே இருக்க வேண்டும் என்ற எண்ணமும் வேண்டியதில்லை.

1965 பொங்கலன்று வெளிவந்த 'எங்க வீட்டுப் பிள்ளை' படத்தில், ஒரு மாறுதல் பிறந்தது.

அதன் பின் மாறுபட்ட ஒரு பாத்திரத்தில் 'நாடோடி' படத்தில், நான் நடித்த போது, அது பற்றி ரசிகர்களிடையே வேறுபட்ட கருத்து உண்டானதாகத் தகவல் கிட்டியது.

இங்கே தான் 'ரசனை வரையறை' இல்லாமல், வேறென்று எதிர்பார்க்கப் படுகிறது.''

ரசனை வரையறை பற்றி அக்கட்டுரையில் எம். ஜி. ஆர். கேட்டுக் கொண்டார்...

''தொடர்ந்து இந்த ரசனை வரையறை நீடிக்க வேண்டும். நீங்கள் இது போன்ற மாறுபட்டக் குணச்சித்திரப் பாத்திரங்களை ரசிக்கிறீர்கள், ஏற்றுக் கொள்கிறீர்கள் என்பதைப் படத்தயாரிப்பாளர்கள் புரிந்து கொள்ளும் நிலை ஏற்பட்டால்தான், நடிப்புக் கலை வளரவும் நடிகர்கள் பல வகை வேடங்களில் நடிக்கவும் இடம் உண்டாகும்''.

'காதல் காட்சிகள்' பற்றியும், அக்கட்டுரையில் தன்னுடைய ரசிகர்களுக்கு, எம் ஜி ஆர் எழுதினர்...?

ஆயினும், படங்களில் வாழ்க்கையில் ஒரு ஆணும் பெண்ணும் எந்த அளவுக்கு நெருங்கிப் பழகுகிறார்கள் என்பதையும் அவர்களுக்கிடையே எழும் கருத்துப் பறிமாறல்களையும் வெளிப்படுத்த பாட்டுக்களாக எடுக்கிறார்கள்.

''சாதாரணமாகப் பாட்டுப் பாடி காதல் செய்வது என்பது, உலகியலில் இல்லாத ஒன்று. பொதுப் பூங்காக்களிலும், படங்களில் வருவது போ காதல் புரிவதற்கு நமது சமூகம் அ திக்காது.

உவகைச் சுவை மனித உள்ளத்திற்கு இன்றியமையாத ஒன்று என்பதற்காக அமைக்கப்படும் இக்காதல் காட்சிகளுக்கு ஒரு எல்லை வகுக்க வேண்டும். அதற்கு ரசனையிலும் ஒரு வரையறை நிர்ணயிக்கப்பட வேண்டும்''.

**எஸ். எஸ். வாசன்**

**எம். ஜி. ஆர்.**

எம். ஜி. ஆர். நடித்த முதல் படமான 'சதி லீலாவதி'யின் கதையை எழுதியவர் 'ஆனந்த விகடன்' ஆசிரியர் எஸ். எஸ். வாசன்.

பின்னாளில் எஸ். எஸ். வாசன் படத்தயாரிப்பாளராகவும், ஜெமினி ஸ்டுடியோ அதிபராகவும் வளர்ந்தார்.

சதி லீலாவதி படத்தில் துணை நடிகராக இருந்த எம். ஜி. ஆர். கதாநாயக நடிகனாக வளர்ந்தார்.

எம். ஜி. ஆரின் 100-வது படம் ஒளி விளக்கு. அதைத் தயாரித்தவர், எஸ். எஸ். வாசன்.



தேர்த்திருவிழா 1968

# எம்.ஜி.ஆர்.படங்கள்



ஒரு தாய் மக்கள் 1971

கணவன் 1968







காதல் வாகனம் 1968



தேடிவந்த மாப்பிள்ளை 1970



எங்கள் தங்கம் 1970



தனிப்பிறவி 1966



ஒளி விளக்கு





காவல்காரன் 1967

விவசாயி 1967









புதியபூமி 1968



அடிமைப்பெண் 1969





ரகசிய போலீஸ் 115 1968



நல்லவன்வாழ் 1961



தாய்க்கு தலைமகன் 1967

குமரிக் கோட்டம் 1971





சங்கே முழங்கு 1972



மாட்டுக்கார வேலன் 1970





நீரும் நெருப்பும் 1971



நான் ஏன் பிறந்தேன் 1972





நினைத்ததை முடிப்பவன் 1975



நேற்று இன்று நாளை 1974



இதய வீணை 1972

குடியிருந்த கோயில் 1968







பட்டிக்காட்டுப் பொன்னையா 1973



இதயக்கனி 1975



இன்று போல் என்றும் வாழ்க 1976



ராமன் தேடிய சீதை 1972



ஊருக்கு உழைப்பவன் 1976



நாளை நமதே 1975





உலகம் சுற்றும் வாலிபன் 1973





உரிமைக்குரல் 1974

நீதிக்கு தலைவணங்கு 1976



சிரித்து வாழவேண்டும் 1974









மதுரையை மீட்ட
சுந்தரபாண்டியன் 1978



'நம்நாடு' படத்தில்

எத்தனை காலந்தான் ஏமாற்றுவார்
இந்த நாட்டிலே—இன்னும்
எத்தனை காலந்தான் ஏமாற்றுவார்—இந்த
நாட்டிலே சொந்த நாட்டில—நாட்டிலே ?
சத்தியம் தவருத உத்தமன் போலவே நடிக்கிருர்
சமயம் பார்த்து பல வகையிலும் கொள்ளை அடிக்கிருர்
பக்தனைப் போலவே பகல் வேஷம் காட்டி
பாமரமக்களை வலையலில் மாட்டி

(எத்தனை)

தெருவெங்கும் பள்ளிகள் கட்டுவோம்—கல்வி
தெரியாத பேர்களே இல்லாமல் செய்வோம்
கருத்தாகப் பல தொழில் பயிலுவோம்—ஊரில்
கஞ்சிக்கில்லை என்ற சொல்லினைப் போக்குவோம்

(இன்னும் எத்தனை)

ஆளுக்கொரு வீடு கட்டுவோம்
ஆய கலைகளை சீராகப் பயிலுவோம்
கேளிக்கையாகவே நாளினைப் போக்கிட
கேள்வியும் ஞானமும் ஒன்ருகத் திரட்டுவோம்

(எத்தனை)



நாமக்கல் கவிஞர் வெ. ராமலிங்கம் பிள்ளையின் கதைக்கு, கலைஞர் மு. கருணாநிதி வசனம் எழுதி, வெளிவந்த 'மலைக்கள்ளன்' இந்தப் பாடலைப் பாடுவதாக எம். ஜி. ஆர். நடித்தார்.

அந்தப் பாடல் காட்சி வெகுவாகப் பாராட்டுப்பெற்றது. படமும் மகத்தான வெற்றி பெற்றது.

அது முதல், தான் நடிக்கும் படங்களில் ஒரு தத்துவப்பாடலை எழுத வைத்து, பாடச்செய்து, அதற்கான காட்சியில் நடிப்பதை எம். ஜி. ஆர். வழக்கமாகவும், கட்டாயமாகவும் மேற்கொண்டார்.

அத்தகைய பாடல் காட்சிகளை எம். ஜி. ஆர். ரசிகர்கள் விரும்பிப் பார்த்தனர்.

தொடர்ந்து பல படங்களில் எம். ஜி. ஆர். நடித்த படங்களில் இடம் பெற்ற தத்துவப்பாடல் சில, இங்கு தொகுக்கப்பட்டுள்ளது.

## நாடோடி மன்னன் 1958

பாடல் : பட்டுக்கோட்டை கல்யாணசுந்தர்

பாடியவர் : டி. எம். சௌந்திரராஜன்

(ரகசியப் போலீஸ் 115)



தூங்காதே தம்பி தூங்காதே — நீயும்
சோம்பேறி என்ற பெயர் வாங்காதே
(தூங்காதே

[redacted]

நீ தாங்கிய உடையும் ஆயுதமும் — பல
சரித்திரக் கதை சொல்லும் சிறைக் கதவும்
சக்தியிருந்தால் உன்னைக் கண்டு சிரிக்கும்
சத்திரந்தான் உனக்கு இடங் கொடுக்கும்
(தூங்காதே

நல்ல பொழுதையெல்லாம் தூங்கிக் கெடுத்தவர்கள்
நாட்டைக் கெடுத்ததுடன் தானும் கெட்டார் — சிலர்
அல்லும் பகலும் தெருக் கல்லாயிருந்து விட்டு
அதிர்ஷ்டம் இல்லையென்று அலட்டிக் கொண்டார்
விழித்துக் கொண்டோரெல்லாம்
பிழைத்துக் கொண்டார் — உன் போல்
குறட்டை விட்டோரெல்லாம் கோட்டை விட்டார்
(தூங்காதே

போர்ப்படைதனில் தூங்கியவன் வெற்றியிழந்தான்
பள்ளியில் தூங்கியவன் கல்வியிழந்தான்
கடைதனில் தூங்கியவன் முதல் இழந்தான்
கடமையில் தூங்கியவன் புகழ் இழந்தான் - இன்னும்
பொறுப்புள்ள மனிதர்கள் தூக்கத்தினால் பல
பொன்னான வேலையெல்லாம் தூங்குதப்பா
(தூங்காதே

## தாய்சொல்லைத் தட்டாதே — 1961

பாடல் : கண்ணதாசன்

பாடியவர் : டி. எம். சௌந்திரராஜன்

போயும் போயும் மனிதனுக்கிந்த
புத்தியைக் கொடுத்தானே—இறைவன்
புத்தியைக் கொடுத்தானே—அதில்
பொய்யும் புரட்டும் திருட்டும் கலந்து
பூமியைக் கெடுத்தானே

(போயும்)

கண்களிரண்டில் அருளிருக்கும்—சொல்லும்
கருத்தினில் ஆயிரம் பொருளிருக்கும்
உள்ளத்தில் பொய்யே நிறைந்திருக்கும்—அது
உடன் பிறந்தோரையும் கருவிருக்கும்
பாயும் புலியின் கொடுமையை இறைவன்
பார்வையில் வைத்தானே புலியின்
பார்வையில் வைத்தானே இந்த
பாழும் மனிதன் குணங்களை மட்டும்
போர்வையில் மறைத்தானே

(போயும்)

கைகளைத் தோளில் போடுகிறான் அதைக்
கருணை என்றவன் கூறுகிறான்
பைகளில் எதையோ தேடுகிறான்—கையில்
பட்டதை எடுத்து ஓடுகிறான்

(போயும்)





## ஆனந்த ஜோதி — 1963

பாடல்: கண்ணதாசன்

பாடியவர் : டி. எம். சௌந்திரராஜன்

ஒரு தாய் மக்கள் நாமென்போம்
ஒன்றே எங்கள் குலமென்போம்
தலைவன் ஒருவன் தான் என்போம்
சமரசம் எங்கள் வாழ்வென்போம்

பொதிகை மலையில் பிறந்தவளாம்
பூவைப் பருவம் அடைந்தவளாம்
கருணை நதியில் குளித்தவளாம்
காவேரிக் கரையில் களித்தவளாம்

உரிமையில் நான்கு திசை கொண்டோம்
உறவினில் நண்பர்கள் பலர் கொண்டோம்
மூத்தவர் என்னும் பெயர் கொண்டோம்
முத்தமிழ் என்னும் உயிர் கொண்டோம்

தர்மத்தில் சங்கொலி முழங்கிடுவோம் — தமிழ்த்
தாயின் மலரடி வணங்கிடுவோம்.
அமைதியை நெஞ்சினில் போற்றி வைப்போம்
ஆனந்த ஜோதியை ஏற்றி வைப்போம்



## படகோட்டி — 1964

பாடல்: வாலி

பாடியவர்: டி. எம். சௌந்திரராஜன்

கொடுத்ததெல்லாம் கொடுத்தான்—அவன்
யாருக்காக கொடுத்தான்
ஒருத்தருக்கா கொடுத்தான்—இல்லை
ஊருக்காக கொடுத்தான்

மண் குடிசை வாசலென்றால் தென்றல் வர
வெறுத்திடுமா
மாலை நிலா ஏழையென்றால் வெளிச்சந்தர
மறுத்திடுமா

உனக்காக ஒன்று எனக்காக ஒன்று
ஒரு போதும் தெய்வம் கொடுத்ததில்லை

படைத்தவன் மேல் பழியுமில்லை
பசித்தவன் மேல் பாவமில்லை
கிடைத்தவர்கள் பிரித்துக் கொண்டார்
உழைப்பவர்கள் தெருவில் நின்றார்
பலர் வாட வாட சிலர் வாழ வாழ
ஒரு போதும் தெய்வம் கொடுத்ததில்லை.
(கொடுத்த)

இல்லையென்பார்கள் இருக்கையிலே
இருப்பவர்கள் இல்லையென்றார்
மடி நிறையப் பொருளிருக்கும்
மனம் நிறைய இருளிருக்கும்
எதுவந்த போதும் பொதுவென்று வைத்து
வாழ்கின்ற பேரை வாழ்த்திருவோம்
(கொடுத்த)

## எங்க வீட்டுப் பிள்ளை — 1965

பாடல் : வாலி

பாடியவர் : டி. எம். சௌந்திரராஜன்

நான் ஆணையிட்டால்—அது நடந்து விட்டால்-இங்கு
ஏழைகள் வேதனைப் படமாட்டார்
உயிர் உள்ளவரை ஒரு துன்பமில்லை—அவர்
கண்ணீர்க் கடலிலே விழமாட்டார்

ஒரு தவறு செய்தால் அதைத் தெரிந்து செய்தால்
அவன்
தேவன் என்றாலும் விடமாட்டேன்
உடல் உழைக்கச் சொல்லுவேன்—அதில்
பிழைக்கச் செய்வேன்—அவை
உரிமைப் பொருள்களைத் ... மாட்டேன்

சிலர் ஆசைக்கும் தேவைக்கும் வாழ்வுக்கும்
வசதிக்கும்
ஊரார் கால் பிடிப்பார்
ஒரு மானமில்லை அதில் ஈனமில்லை—அவர்
எப்போதும் வால் பிடிப்பார்
எதிர்காலம் வரும் என் கடமை வரும்—இந்தக்
கூட்டத்தின் ஆட்டத்தை ஒழிப்பேன்

'சிரித்து வாழவேண்டும்'





‘சிரித்து வாழவேண்டும்’

பொது நீதியிலே புதுப்பாதையிலே—வரும்
நல்லோர் முகத்திலே விழிப்பேன்
இங்கு ஊமைகள் ஏங்கவும் உண்மைகள் தூங்கவும்
நானு பார்த்திருப்பேன்

## சந்திரோதயம் — 1966

பாடல்: வாலி

பாடியவர்: டி. எம். சௌந்திரராஜன்

புத்தன் ஏசு காந்தி பிறந்தது
பூமியில் எதற்காக ? தோழா ஏழை நமக்காக
கங்கை யமுனை காவிரி வைகை
ஓடுவதெற்காக நாளும் உழைத்து
தாகம் எடுத்த தோழர்கள் நமக்காக
கேள்விக்குறி போல் முதுகுவளைந்து
உழைப்பது எதற்காக மானம் ஒன்றே
பெரிதென எண்ணி பிழைக்கும் நமக்காக
நிழல் வேண்டும் போது மரம் ஒன்றும் உண்டு
மழை வந்தபோது துணை ஒன்று உண்டு
இருள் வந்தபோது விளக்கொன்று உண்டு
எதிர்காலம் ஒன்று எல்லோருக்கும் உண்டு
உண்மை என்பது என்றும் உள்ளது
தெய்வத்தின் மொழியாகும் நன்மை என்பது

(புத்தன்)

நாளை வருவது நம்பிக்கை ஒளியாகும்

பொருள் கொண்ட பேர்கள் மனம் கொண்டதில்லை
தரும் கைகள் தேடி பொருள் வந்ததில்லை
மனம் என்ற கோயில் திறக்கின்ற நேரம்
அழைக்காமல் இங்கே தெய்வம் வந்து சேரும்
அழுதவர் சிரிப்பதும் சிரிப்பவர் அழுவதும்
விதிவழி வந்ததில்லை ஒருவருக்கென்றே
உள்ளதையெல்லாம் இறைவனும் தந்ததில்லை

(புத்தன்)

## அடிமைப்பெண் — 1969

பாடல்: வாலி

பாடியவர்: டி. எம். சௌந்திரராஜன்

ஏமாற்றாதே ஏமாற்றாதே....ஏமாறாதே ஏமாறாதே
அந்த இருட்டுக்கும் பார்க்கின்ற விழியிருக்கும்
எந்த சுவருக்கும் கேட்கின்ற காதிருக்கும்
சொல்லாமல் கொள்ளாமல் காத்திருக்கும்
சமயத்தில் நடந்ததை எடுத்துரைக்கும்

(ஏமாற்றாதே)

பொது நீதிக்கும் நேர்மைக்கும் பயந்து விடு நல்ல
அன்புக்கும் பண்புக்கும் வளைந்து விடு
இன்றோடு போகட்டும் திருந்தி விடு-உந்தன்
இதயத்தை நேர்வழி திருப்பி விடு
நிழல் பிரிவதில்லை தன் உடலை விட்டு
அது அழிவதில்லை காலடிகள் பட்டு.நீ
நடமாடும் பாதையில் கவனம் வைத்தால் இங்கு
நடப்பது நலமாய் நடந்து விடும்

(ஏமாற்றாதே)





'சிரித்து வாழவேண்டும்'

## எங்கள் தங்கம் — 1970

பாடல் : வாலி

பாடியவர் : டி. எம். சௌந்திரராஜன்

நான் செத்துப் பொழச்சவண்டா—எமனைப்
பார்த்து சிரிப்பவண்டா ஹா ஹ ஹா ஹ ஹா
வாழை போல வெட்ட வெட்ட...முளைச்சு
சங்கு போல சுடச்சுட வெளுத்து
வளரும் ஜாதியடா வந்தாத் தெரியும் சேதியடா

(நான்)

சிலுவையில் ஏசு மறைஞ்சாரு மக்கள்
சித்தமெல்லாம் வந்து நிறைஞ்சாரு
குண்டுகள் போட்டுத் துளைச்சாங்க ஆனா
காந்தியும் லிங்கனும் நிலைச்சாங்க
சந்தனப் பெட்டியில் உறங்குகிறார். அண்ணா அண்ணா
சரித்திர புகழுடன் விளங்குகிறார்
எதையும் தாங்கும் இதயம் கொண்டு-அண்ணன்
எங்களை வாழ்ந்திடச் சொன்னதுண்டு

## நான் ஏன் பிறந்தேன்? — 1972

பாடல் : வாலி

பாடியவர் : டி. எம். சௌந்திரராஜன்

நான் ஏன் பிறந்தேன்—நாட்டுக்கு
நலமென்ன புரிந்தேன்—என்று
நாளும் பொழுதும் வாழும் வரையில்
நினைத்திடு என் தோழா நினைத்து
செயல்படு என் தோழா!

(நான்)

நாடென்ன செய்தது நமக்கு—எனக்
கேள்விகள் கேட்பது எதற்கு—நீ
என்ன செய்தாய் அதற்கு—என
நினைத்தால் நன்மை உனக்கு
மலையில் பிறந்த நதியால்—மக்கள் தாகம் தீர்ந்தது
மரத்தில் பிறந்த கனியால்—அவர் பசியும் தணிந்தது
செடியில் பிறந்த மலரால்—எங்கும் வாசம் கமழ்ந்தது
அன்னை மடியில் பிறந்த உன்னால்
ன்ன பயன்தான் விளைந்தது

(நான்)

பத்துத் திங்கள் சுமந்தாளே—அவள்
பெருமைப்பட வேண்டும்—உன்னைப்
பெற்றதனால் இவள் மற்றவராலே போற்றப்பட
வேண்டும்

கற்றவர் சபையில் உனக்காகத்—தனி
இடமும் தரவேண்டும்—உன்
கண்ணில் ஒரு துளி நீர் வந்தாலும்
உலகம் அழவேண்டும்

(ரகசியப் போலீஸ் 115)





## மகேஸ்வரியும் அலிபாபாவும்

1955-ல் மாடர்ன் தியேட்டர்ஸ் 'மகேஸ்வரி' படம் வெளிவந்தது.

# சுவையான செய்திகள்

### எம். ஜி. ஆரின் முதல் படம்

"திரைப்படத்தில் உங்களைக் கதாநாயகனாக்கி, நடிக்க வைத்தவர் யார்?'' என்ற கேள்விக்கு 1970-ல்., எம். ஜி. ஆர்: ''பட உரிமையாளர்கள் என்று எடுத்துக் கொண்டால் முதலாவதாக எனக்கு கதாநாயகன் வேடம் தந்து படம் எடுத்தவர் நாராயணன் கம்பெனியின் உரிமையாளராக இருந்த காலஞ்சென்ற கே. எஸ். நாராயண அய்யங்கார் அவர்கள் ஆனால் அந்தப் படம் பாதியிலேயே நிறுத்தப்பட்டு விட்டது.

எம். ஜி. ஆர். கதாநாயகனாக நடித்து முதன் முதலில் வந்திருக்க வேண்டிய அந்தப் படத்தின் பெயர் என்ன?

1941-ல் 'இழந்த காதல் என்றொரு படம் வெளிவந்தது. அந்தப் படத்தின் பாட்டுப் புத்தகத்தின் கடைசி அட்டையில் ஒரு விளம்பரம். ''சாயா'' என்கிற பெயரில் ஒரு படம் தயராவதாகவும் எம். ஜி. ராமச்சந்திரன் நடிப்பதாகவும் அந்த விளம்பரம் சொல்கிறது.

நடிகர் பட்டியலில் எம். ஜி. ராமச்சந்திரன் பெயர் முதல் இடத்தில் அச்சானது அதுதான் முதல் தடவை.

அந்தப் படத்தில் எம். ஜி. ஆர். நடிப்பதாக முதலில் செய்திகள் வந்தன.

ஆனால், படம் வெளி வந்தபோது ஜெமினி கணேசன் கதாநாயகனாக நடித்திருந்தார்.

ஆனால்—

மாடர்ன் தியேட்டர்ஸார் தயாரித்த தமிழகத்தின் முதல் வண்ணப்படமான 'அலிபாபாவும் 40 திருடர்களும்' படத்தின் நாயகனாக எம். ஜி. ஆர். நடித்தார். 1956-ல் அப்படம் வெளிவந்தது.

எம்.ஜி.ஆர். பட உலகில் இருக்கிற வரை அதிகமான வண்ணப்படங்களில் எம். ஜி. ஆர். தான்.

அவர் நடித்த கலர்ப் படங்களின் எண்ணிக்கை நாற்பது.

### சிலம்புக் குகை

1957-ல் எம்.ஜி.ஆர். நடிப்பதாக இரண்டு படங்களின் விளம்பரங்கள் பத்திரிகைகளில் வெளி வந்தன.

1. 'சிலம்புக் குகை'
2. 'மலைநாட்டு இளவரசன்'

என்ன காரணமோ அப்படங்கள் வெளிவரவில்லை.




'சாயா' பட விளம்பரம்



'சிரிக்கும் சிலை' என்றொரு படம், எம்.ஜி.ஆர். நடித்துத் தயாராகி வந்ததாக விளம்பரங்களும் செய்திகளும் பத்திரிகைகளில் வெளிவந்தன. ஆனால் படம் வெளிவரவில்லை.

1657-ல் 'தினத்தந்தி' பத்திரிகையில் ஒருநாள் எதிரெதிரே இரண்டு அரைப் பக்க விளம்பரங்கள்.

எம்.ஜி.ஆர். இரண்டு வேடங்களில் நடிக்கும் 'உத்தமபுத்திரன்' தயாராகிறது'' என்று ஒரு விளம்பரம்.

''சிவாஜி கணேசன் இரண்டு வேடங்களில் நடிக்கும் உத்தமபுத்திரன் தயாராகிறது'' என்று இன்னொரு விளம்பரம் எதிர்ப்பக்கத்தில்.

ஆனால்—

1941-ல், மாடர்ன் தியேட்டர்ஸார் தயாரித்த 'உத்தமபுத்திரன்' கதையை உரிமைகளை டைரக்டர் ஸ்ரீதர் வாங்கி வைத்திருந்ததால் சிவாஜிகணேசன் நடித்த உத்தமபுத்திரனே 1958-ல் வெளிவந்தது.

கல்கி எழுதிய 'பொன்னியின் செல்வன்' கதையை பிரம்மாண்டமான முறையில் தயாரிக்கப் போவதாக எம். ஜி. ஆர். கூறிவந்தார்.

ஆனால் அந்த முயற்சி நிறைவேறவில்லை.

1975-ல், அனைத்துலக எம். ஜி. ஆர். ரசிகர் மன்றத் தலைவர் முசிறிப் புத்தன். 'மக்கள் என் பக்கம்' என்ற பெயரில் ஒரு எம். ஜி. ஆர். படம் தயாரிக்கப் போவதாக அறிவித்தார்!

## சின்னப்பா தேவர்

எம். ஜி. ஆரை வைத்து அதிகப் படங்களைத் தயாரித்தவர் சாண்டோ சின்னப்பா தேவர்.

அவர் தயாரித்த எம். ஜி. ஆர். படங்களின் எண்ணிக்கை பதினாறு.

மலைக்கள்ளன், குலேபகாவலி, அலிபாபா, மதுரைவீரன், என்று தொடர்ந்து எம். ஜி. ஆர். நடித்த ராஜாராணி கதைப் படங்களே வெளிவந்ததால், எம். ஜி. ஆருக்கு சமூகப் படங்கள் சரிப்பட்டு வராது என்று பலர் நினைத்தார்கள்.

இந்த எண்ணத்தை மாற்றிக் காட்டியவர் சாண்டோ சின்னப்பா தேவர்.

அவர் 1956-ல் தயாரித்த சமூகப் படம் 'தாய்க்குப்பின் தாரம்' அமோக வெற்றி பெற்றது.

சமூகப் படங்களிலும் எம். ஜி. ஆர். வெற்றி பெறுவார் என்று தேவர் நிருபித்துக் காட்டினார்.

## இந்தி பேசும் மாநிலங்களில் எம். ஜி. ஆர்.

இந்தி பேசும் மாநிலங்களான மகாராஷ்டிரம், உத்திரப் பிரதேசம்,



மத்தியப் பிரதேசம் போன்றவற்றில் வாழ்கிற மக்களுக்கெல்லாம் எம். ஜி. ஆரை 1956-லிருந்தே தெரியும்.

எப்படி?

1956-ல் எம். ஜி. ஆர். நடித்த 'குலேபகாவலி' தமிழ்ப் படம் 'குல்-இ-பகாவலி' என்ற பெயரில் இந்தி மொழியில் 'டப்' செய்யப்பட்டு அந்த மாநிலங்களில் வெளியிடப்பட்டது.

எம். ஜி. ஆர். நடித்து இந்தி மொழியில் 'டப்' செய்யப்பட்ட இதர படங்கள்—

'பாக்தாத் திருடன்' (இந்தியில்—'பாக்தாத்')

'அரசிளங்குமரி' (இந்தியில்—'மேரிபஹன்')

'நாடோடி மன்னன்' (இந்தியில்—ஹமே பிஜே னே தோ)

'மன்னாதிமன்னன்' (இந்தியில்—'நர்த்தகி சித்ரா')

'அடிமைப்பெண்' (இந்தியில்—'கோயி குலாம் நஹீ')

'நீரும் நெருப்பும்' (இந்தியில்—'ஆக்ரி நிஷான்')

'உலகம் சுற்றும் வாலிபன்' (இந்தியில்—'ரங்கீன் துனியா)

'இதய வீணை' (இந்தியில்—'லவ் இன் காஷ்மீர்')

## சாகஸ வீருடு

## வீர புத்ருடு

இதென்ன?

டு? டு?

எம். ஜி. ஆர். நடித்த 'மதுரை வீரன்' தெலுங்கு மொழியில் 'டப்' செய்யப்பட்ட போது இதற்கு தெலுங்கில் பெயர்—

'சாகஸ வீருடு'

'தாயைக் காத்த தனயன்' தெலுங்கில் 'டப்' செய்யப்பட்ட போது, தெலுங்குப் பெயர்—

'வீர புத்ருடு'

'அலிபாபா, முதல் 'நீரும் நெருப்பும்' வரை எம். ஜி. ஆர். நடித்த அறுபது படங்கள் தெலுங்கு மொழியில் 'டப்' செய்யப்பட்டுள்ளன.

திருடாதே தெலுங்கில்—
'ஜெபு தொங்கா'

பாக்தாத் திருடன் தெலுங்கில்—
'பாக்தாத் கஜ தொங்கா'

வேட்டைக்காரன் தெலுங்கில்—
'இண்டி தொங்கா'.

## ஜெயலலிதா இருபத்தாறு

எம். ஜி. ஆருடன் நடித்த கதாநாயகிகள் பட்டியல்—

எம். ஜி. ஆரின் முதல் படம் ராஜகுமாரியில்—கே. மாலதி.

இண்டாவது படம் மந்திரி குமாரியில்—ஜி. சகுந்தலா.

மூன்ருவது படம், மருத நாட்டு இளவரசியில்—வி. என். ஜானகி.

தொடர்ந்து, எம். ஜி. ஆர். காதலிகளாக, எம். ஜி. ஆரை காதலித்தவர்களாக நடித்தவர்கள் பட்டியல் பெரியது—

டி. ஆர். ராஜகுமாரி

ஜி. வரலட்சுமி

பி. எஸ். சரோஜா

பி. பானுமதி

பத்மினி

அஞ்சலிதேவி




1957-ல் வெளியான விளம்பரம்

எஸ். வரலட்சுமி

சாவித்திரி

சரோஜாதேவி

மாலினி

ரத்னு

கே. ஆர். விஜயா

ஜெயலலிதா

பாரதி

சந்திரகலா

காஞ்சனு

வாணிஸ்ரீ

மஞ்சுளா

லதா

சுபா

ராதாசலுஜா (இந்தி நடிகை)

மேட்டா (தாய்லாந்து)

நவரத்தினத்தில் ஒன்பது நடிகைகள்!



இவர்களில் எம். ஜி. ஆருடன் கதாநாயகியாக அதிகப் படங்களில் நடித்தவர் ஜெயலலிதா.

நடித்த படங்களின் எண்ணிக்கை இருபத்தாறு.

### வசூல் சக்ரவர்த்தி

எம். ஜி. ஆர். நடித்துக் கொண்டிருந்த போது அவர்தான் 'வசூல் சக்கரவர்த்தி'.

அவர் நடித்த 68 படங்கள் நூறு நாட்கள் ஓடியிருக்கின்றன.

மதுரை வீரன்

நாடோடி மன்னன்

எங்க வீட்டுப் பிள்ளை

ஒளி விளக்கு

அடிமைப் பெண்

மாட்டுக்கார வேலன்

அன்பே வா

ரிக்ஷாக்காரன்

உரிமைக்குரல்

ஆகிய படங்கள் இருபத்தைந்தாவது வாரம் ஓடி வெள்ளி விழா கண்டன.

'உலகம் சுற்றும் வாலிபன்' முப்பத்தோரு வாரங்கள்.

இப்போதும், எம்.ஜி.ஆர். நடித்த பல படங்கள் தமிழகம் முழுதும் எங்கேயாவது ஓடிக்கொண்டேயிருக்கின்றன.

### மகன்!

### தந்தை! சித்தப்பா!

'அரச கட்டளை' படத்தை தயாரித்தவர் — எம். சி. ராமமூர்த்தி.



இவர் எம். ஜி. சக்கரபாணியின் மகன் எம். ஜி. சக்கரபாணி 'அரசகட்டளை' படத்தை டைரக்ட் செய்தார்.

தயாரிப்பாளர் ராமமுர்த்தியின் சித்தப்பா—எம்.ஜி.ஆர். இவர்—'அரசகட்டளை' படத்தின் கதாநாயகர்.

## வேங்கையும் சிங்கமும்

'குலேபகாவலி' படத்தில் எம். ஜி. ஆர். புலியுடன் சண்டை போட்டார்.

வாகினி ஸ்டுடியோவில் ஒரு பெரிய படப் பிடிப்புத் தளத்திற்குள் பெரிய பள்ளம் வெட்டி அதற்குள் எம்.ஜி.ஆர். புலியோடு மோதும் காட்சியைப் படமாக்கினார்கள்.

எம். ஜி. ஆர். சிங்கத்தோடு மோதிய படம்—அடிமைப்பெண்.

இதற்காக சத்யா ஸ்டுடியோ திறந்த வெளியில் படப்பிடிப்பு அரண் நிர்மாணிக்கப்பட்டது.

சர்க்கஸ் கம்பெனியொன்றிலிருந்து எட்டு ஆயிரம் ரூபாய்க்கு சிங்கம் கொண்டு வரப்பட்டது.

அதே சிங்கம் போன்று, பஞ்சு அடைத்து செய்யப்பட்ட பொம்மை சிங்கம் 6 ஆயிரம் ரூபாய்க்கு மைசூரிலிருந்து வாங்கி வரப்பட்டது.

'அடிமைப் பெண்' சண்டைக் காட்சியில் நிஜமான சிங்கமும் பொம்மை சிங்கமும் பயன்படுத்தப் பட்டன.

உயிரோடு வாங்கிய சிங்கத்தை எம். ஜி. ஆர். சென்னை மிருகக்காட்சி சாலைக்கு அன்பளிப்பாகக் கொடுத்து விட்டார்.

பொம்மை சிங்கம் இன்றும் எம் ஜி. ஆர். வீட்டில் இருக்கிறது.

**இந்த ஸ்பெஷல்...**

10-11, 20-21,

30-40, 54-69 பக்களில் உள்ள படங்கள் : **பிலிம் நியூஸ் ஆனந்தன்**

இதர படங்கள் : **அறந்தையின் சினிமா ஆராய்ச்சி மையம்**

தொடுப்பு : **ஓவியர் கோபால்**

வெளியிடுபவர் : எஸ். சண்முகம், 2, புது ஆவடி சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை-600 010. தொலை பேசி : 613322
அச்சிடுபவர் : டி. ஏ. பிரிண்டர்ஸ், கீழ்ப்பாக்கம், சென்னை-600 010. ஆசிரியர் : [illegible]


WITH BEST COMPLIMENTS


19
THIRAICHUVAI TAMIL WEEKLY
REGD No TN/MS(N)/439
திரைச்சுவை
பொங்கல்
மலர் - 1986